25.06.15

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**பீர்க்கங்காய் குறைந்த முதலீட்டில் அதிக லாபம்!**



குறைந்த முதலீட்டில் பீர்க்கங்காய் பயிரிட்டு, ஒரு ஹெக்டேருக்கு 15 முதல் 20 டன் வரை மகசூல் பெற்று அதிக லாபம் ஈட்ட முடியும் என தோட்ட கலைத்துறை தெரிவித்துள்ளது. காய் வகைகளில் அனைத்துத் தரப்பினரும் விரும்பி உண்ணுவது பீர்க்கங்காய். கொடி வகையான இந்தப் பயிரின் வளர்ச்சிக்கு பந்தல் அமைப்பது அவசியமாகும். இதை லாபகரமான முறையில் பயிர் செய்வது எப்படி என்பது குறித்து திருவள்ளூர் மாவட்டத் தோட்டக் கலைத்துறை அலுவலர்கள் தெரிவித்த யோசனைகள்:

மண், தட்பவெப்ப நிலை: பொதுவாக மண் பாங்கான தண்ணீர் தேங்காத அனைத்து மண் வகைகளும் ஏற்றதாகும். இந்தப் பயிரை கோடை, மழைக் காலங்களிலும் சாகுபடி செய்யலாம். கோடைக் காலங்களில் வெப்ப நிலை 35 டிகிரி செல்சியஸ்க்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.

பருவம்: இந்தப் பயிருக்கு ஜூன், டிசம்பர், ஜனவரி ஆகிய மாதங்கள் பருவ காலமாக உள்ளது. நிலம் தயார்படுத்துதல்: நிலத்தை 3 முதல் 4 முறை நன்றாக உழுது 2.5 மீட்டர் இடைவெளியில் 60 செ.மீ. அகலமுள்ள வாய்க்கால்களை எடுத்து நிலத்தை தயார்படுத்த வேண்டும். பின்பு வாய்க்காலில் 45 செ.மீ. ஆழம், அகலம், நீளமுள்ள குழிகளை 1.5 செ.மீ. இடைவெளியில் எடுத்து, அதில் 10 கிலோ நன்கு மக்கிய தொழு உரத்துடன், 100 கிராம் கலப்பு உப்பு கலந்து மேல் மண்ணுடன் சேர்த்து இட்டு நடவுக் குழு தயார் செய்ய வேண்டும். விதையளவு: ஒரு ஹெக்டேருக்கு 1.50 கிலோ முதல் 2 கிலோ வரை விதை தேவைப்படும். ஒரு குழிக்கு 5 விதைகள் ஊன்ற வேண்டும். முளைத்தவுடன் நன்கு வளர்ந்த 3 செடிகளை மட்டும் விட்டு மற்ற செடிகளைப் பிடுங்கி எடுக்க வேண்டும்.

பின் செய் நேர்த்தி: விதை ஊன்றியவுடன் குடம் அல்லது பூவாளி வைத்து தண்ணீர் ஊற்ற வேண்டும். நாற்றுகள் வளர்ந்த உடன், வாய்க்கால் மூலம் 7 முதல் 10 நாள்கள் இடைவெளியில் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். கொடி வளர்ந்தவுடன் பந்தல் போட்டு கொடியைப் படர விட வேண்டும். எத்ரல் எனும் வளர்ச்சி ஊக்கியை 250 பிபிஎம் என்ற அளவில் இரண்டு இலைப் பருவத்தில் தெளிப்பதால் பெண் பூக்கள் அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. இதை மீண்டும் 7 நாள்கள் இடைவெளியில் மூன்று முறை தெளிக்க வேண்டும். விதை ஊன்றிய 30 நாள் கழித்து 50 கிலோ யூரியாவை களை எடுத்து மேலுரமாக இட்டு மண் அணைத்து தண்ணீர் பாய்ச்ச வேண்டும். பயிர்ப் பாதுகாப்பு: பூசணி வண்டு தாக்குதலை 2 கிராம் கார்பரைல் மருந்தை 1 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்து, கட்டுப்படுத்தலாம். பழ ஈயை கட்டுப்படுத்த மாலத்தியான் 1 மில்லி லிட்டரை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். இல்லையெனில், கருவாட்டுப் பொறி வைத்தும் கட்டுப்படுத்தலாம். சாம்பல் நோயைக் கட்டுப்படுத்த 0.1 சதவீத பெவிஸ்டின் மருந்தை

தெளித்து கட்டுப்படுத்தலாம். அறுவடை, மகசூல்: முதல் அறுவடை விதை ஊன்றிய 50 முதல் 60 நாள்கள் கழித்து மகசூல் பெறலாம். அதைத் தொடர்ந்து ஒரு வார இடைவெளியில் 10 முறை தொடர்ந்து அறுவடை செய்யலாம். விவசாயிகள் இந்த முறையைக் கடைப்பிடித்தால் ஒரு ஹெக்டேருக்கு 15 முதல் 20 டன் வரை மகசூல் பெற்று பயனடையலாம்.

**பால் உற்பத்தியில் சுகாதாரம் பேணுவது எப்படி?**



தமிழகத்தில் நாள் ஒன்றுக்கு 30 லட்சம் லிட்டருக்கு மேல் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. இதில் அதிகபட்ச கொள்முதலை ஆவின் நிர்வாகம் பெற்று வருகிறது. குறிப்பாக வேலூர், திருவண்ணாமலை மாவட்டங்களில் சமீபகாலமாக பால் உற்பத்தி மாதம்தோறும் கணிசமான அளவில் அதிகரித்து வருகிறது. இதற்கு காரணம் மழையின்மையால் விவசாயிகள் மாற்றுத் தொழிலாக பால் உற்பத்தியை நம்பி களத்தில் இறங்கியுள்ளதுதான் எனக் கருதப்படுகிறது. இந்த நிலையில், பால் உற்பத்தியில் சுகாதாரமும் கருத்தில் கொள்ள வேண்டியுள்ள நிலையில், அதைப் பின்பற்றும் எளிய முறைகள் குறித்து கால்நடை பல்கலைக்கழக பயிற்சி, ஆராய்ச்சி மைய பேராசிரியர்கள் ச.சரஸ்வதி, ப.ராஜேஷ்குமார்,

ஆர்.ராஜ்குமார் ஆகியோர் தெரிவித்த யோசனைகள்:

பால் கறக்கும் முறை: பசுக்கள் இடப்பக்கத்திலிருந்தே பால் தரும் இயல்புடையவை. இவற்றின் மடியில் பால் கறக்கும்போது முன்னிரு, பின்னிரு காம்புகளிலோ அல்லது பக்கங்களில் உள்ள காம்புகளிலோ இரண்டு கைகளையும் பயன்படுத்திக் கறப்பது நல்லது. முதல் சில துளிகளை பாத்திரத்தில் விடாமல் பீய்ச்சிக் கீழே விட்டுவிட வேண்டும். இத்துளிகளில் அதிகமாக பாக்டீரியாக்கள் இருக்கும் என்பதால் இந்த நடைமுறையைப் பின்பற்ற வேண்டும். இரு விரல்களை பயன்படுத்தியோ, முழு விரல்களையும் பயன்படுத்தியோ பால் கரக்கலாம். இரு விரல் முறையில் கட்டை விரலுக்கும், ஆள்காட்டி விரலுக்கும் இடையில் காம்புகளைப் பிடித்து சிறிது அழுத்தம் தந்து கீழே இழுப்பதன் மூலம் பால் கறக்கலாம். முழு விரல்களைப் பயன்படுத்தும்போது, ஒரு கை விரல்களால் காம்பினைப் பிடித்து உள்ளங்கையின் மீது அழுத்துவதால் கன்றுக்கு ஊட்டுவது போல் எல்லாப் பக்கமும் ஒரே அழுத்தம் ஏற்பட்டு பால் கறக்கும். இருவிரல் முறையில் ஒரே அழுத்தம் கிடைக்காது என்பதால் காம்பின் மேல்பாகம் பாதிக்கப்பட்டு சிறு காயங்கள் ஏற்படும் வாய்ப்புகள் அதிகம். காம்புகள் மிகச் சிறியதாக இருந்தால் மட்டுமே இருவிரல் முறையைப் பயன்படுத்துவது நல்லது. மிக முக்கியமாக ஈரமான கைகளால் பால் கறப்பதை முற்றிலும் தவிர்க்க வேண்டும்.

சுத்தமான பால்: பசுவின் மடியில் அதிகம் அழுக்கு சேரும். எனவே பால் கரப்பதற்கு முன் மடியை நன்றாக கழுவ வேண்டும். பால் காம்புகளும் தூய்மைப்படுத்தப்பட வேண்டும். முடிந்தால் நல்ல துணி மூலம் கழுவிய மடியை துடைப்பதும் நல்லது. ஒருமுறை பயன்படுத்தும் கைதுடைப்பு காகிதங்களை பயன்படுத்துவது சிறந்தது. பால் கறக்கும்போது உரோமங்கள் பாலில் விழுவதைத் தவிர்க்க அவ்வப்போது குளிப்பாட்டும்போது நன்கு தேய்த்து உடலில் உதிரும் ரோமங்களை அகற்ற வேண்டும். மாட்டுச் சாணத்தால் ஈக்கள் மொய்க்கும்.

எனவே மாட்டுத் தொழுவம் அவ்வப்போது கிருமிநாசினியால் கழுவப்படுவதன் மூலம் அப்பகுதி சுகாதாரத்தைப் பேண முடியும். முக்கியமாக பால் கரக்கும் பாத்திரம் ஒவ்வொரு முறையும் சுத்தப்படுத்தப்பட வேண்டும். கொதிக்கும் நீரை பால் கறக்கும் பாத்திரத்தில் ஊற்றினால் 2 நிமிடத்தில் பாத்திரத்தில் உள்ள பாக்டீரியாக்கள் அழிந்து பாத்திரம் சுத்தமாகிவிடும். இந்த நடைமுறைகளை பின்பற்றுவதால் பாலில் பாக்டீரியாக்களின் பாதிப்பை தவிர்த்து சுத்தமான பாலை நுகர்வோருக்கு அளிக்க முடியும். பால் கெடாத தன்மை நீண்டநேரம் நீடிக்கும். மாடுகளுக்கும், தொழுவம் முழுவதும் அவ்வப்போது சாம்பிராணி போடுவதன் மூலம் நோய்த் தொற்றுகளைத் தவிர்க்க முடியும். மாட்டுத் தொழுவத்தின் மிக அருகே தண்ணீர் தேங்கினால் அதை உடனடியாக அகற்ற வேண்டும். எனவே மாட்டுத் தொழுவம் சற்று மேடான இடத்தில் அமைவது நல்லது. பால் கறக்கும்போது மணம் வீசும் தீவனங்களை மாடுகளுக்கு அளிப்பதை தவிர்க்க வேண்டும். இல்லாவிடில் பாலில் அந்த வாடை எளிதில் தொற்றிக் கொள்ளும். மனித சுகாதாரம்: மாடுகளை பராமரிப்போர், பால் கறப்போர் காச நோய், டைஃபாய்டு, டிப்தீரியா போன்ற வியாதிகளால் பாதிக்கப்பட்டால் கண்டிப்பாக மாடுகளிடம் நெருங்கக் கூடாது. இது மாடுகளுக்கும், சுகாதாரமான பால் கறவைக்கும் நல்லது. பால் கறப்பவர்கள் கண்டிப்பாக விரல் நகங்களை வெட்டி, விரல் நகங்களில் அழுக்கு சேராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பால் பாத்திரங்கள்: பால் கறவை, பால் சேமிப்புக்கான பாத்திரங்கள் இடுக்குகள், மடிப்புகள் இன்றி எளிதில் தூய்மை செய்யக் கூடிய வகையிலான அமைப்பில் இருக்க வேண்டும். அயோட்போர் போன்ற ரசாயனக் கலவை மூலம் அடிக்கடி இந்த பாத்திரங்களை சுத்தம் செய்வதும் அவசியம். பாலைக் கறந்ததும் அதை மிதமான வெப்பநிலையில் வைக்க வேண்டும். அதிக வெப்பநிலை உள்ள

இடத்தில் வைத்தால் எளிதில் கெட்டுவிடும்.

**நீலகிரி, தேனி, கோவையில் பலத்த மழைக்கு வாய்ப்பு**

தமிழகத்தில் நீலகிரி, தேனி, கோவையில் அடுத்த 24 மணி நேரத்தில் ஒரு சில இடங்களில் இடியுடன் கூடிய பலத்த மழைக்கு வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது.

இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரி கூறியதாவது: ஆந்திரம், கர்நாடகம், தெலுங்கானா ஆகியப் பகுதிகளில், தென் மேற்குப் பருவ மழை தீவிரம் அடைந்து வருகிறது. பருவ மழையின் தீவிரம் காரணமாக, அந்தப் பகுதிகளில் கடந்த ஒரு வாரமாக பலத்த மழை பெய்து வருகிறது. அதன் தாக்கமாக, தமிழகத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையை ஒட்டிய மாவட்டங்களில் கடந்த ஓரிரு நாள்களாக பலத்த மழை பெய்து வருகிறது.

வால்பாறையில் 100 மி.மீ மழை: கடந்த 24 மணி நேரத்தில், வால்பாறையில் அதிகபட்சமாக 100 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளது. அதை அடுத்து, கோவை மாவட்டம் சின்னகல்லாரில் 90 மி.மீ, நீலகிரி மாவட்டம் ஜி.பஜாரில் 80 மி.மீ, தேவலா, உதக மண்டலத்தில் 70 மி.மீ, தேனி மாவட்டம் பெரியாறில் 40 மி.மீட்டர் மழை பதிவானது.

பலத்த மழை: வெப்பச் சலனம் காரணமாக தமிழகம், புதுச்சேரியில் வியாழக்கிழமை ஒரு சில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும். தேனி, நீலகிரி, கோவை ஆகிய இடங்களில் பலத்த மழை பெய்யும் வாய்ப்புள்ளது.

சென்னை மாநகரைப் பொருத்தவரை, வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒரு சில பகுதிகளில், மாலை அல்லது இரவு நேரத்தில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது என்றார்.

**5 நகரங்களில் 100 டிகிரிக்கு மேல் வெயில்**

தமிழகத்தில் சென்னை, மதுரை உள்ளிட்ட 5 நகரங்களில் புதன்கிழமை 100 டிகிரி ஃபாரன்ஹீட்டுக்கு மேல் வெயில் பதிவானது. அதிகபட்சமாக சென்னையில் 102 டிகிரி வெப்பம் பதிவாகியுள்ளது. வெப்பச் சலனம் காரணமாக, கடந்த சில நாள்களாக சென்னை உள்ளிட்ட தமிழகத்தின் சில மாவட்டங்களில் ஆங்காங்கே மழை பெய்து வருகிறது. ஒரு சில மாவட்டங்களில் பலத்த மழை பெய்து வருகிறது. இதேபோன்று, சென்னை மாநகரிலும் கடந்த ஒரு வாரமாக குளிர் காற்றுடன் கூடிய காலநிலை நிலவியது. இந்த நிலையில், கடந்த 2 நாள்களுக்கு முன்னர் திடீரென மாறிய காலநிலையால், மீண்டும் சென்னை, அதைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் வெப்பத்தின் தாக்கம் அதிகரித்துள்ளது.

சென்னை, அதைச் சுற்றியுள்ள பகுதிகளில், காலை முதலே அனல் காற்றின் தாக்கமும், புழுக்கமும் காணப்படுகிறது. அனல் காற்றின் தீவிரத்தால், பொதுமக்களும், வாகன ஓட்டிகளும் கடும் அவதிப்பட்டனர். சென்னை, திருச்சியில் அதிகபட்சமாக புதன்கிழமை 102 டிகிரி ஃபாரன்ஹீட் வெயில் பதிவானது. அதற்கு அடுத்தபடியாக, கடலூரில் 101-ம், மதுரை, பரங்கிப்பேட்டையில் 100-ம், பாளையங்கோட்டையில் 99-ம், கரூர் பரமத்தி, வேலூரில் 98 டிகிரி ஃபாரன்ஹீட் வெயிலும் பதிவானது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது.

**குறுவை சாகுபடிக்கு தண்ணீர் திறக்க வேண்டும்: ஜி.கே.வாசன்**

குறுவை சாகுபடிக்கு மேட்டூர் அணையில் இருந்து ஜூலை மாதத்திலாவது தண்ணீர் திறந்தவிட தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமாகா தலைவர் ஜி.கே.வாசன் வலியுறுத்தினார். இதுதொடர்பாக புதன்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை: தமிழகத்தில் குறுவை சாகுபடிக்கு மேட்டூர் அணையில் இருந்து உரிய நேரத்தில் தண்ணீர் திறக்கப்படவில்லை. குறுவை சாகுபடிக்கும் போதிய தண்ணீர்

இல்லாமல் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒருபோக சம்பா பயிர் சாகுபடியை மட்டும் நம்பி விவசாயிகள் விவசாயம் செய்ய முடியாது. எனவே, உடனடியாக ஜூலை மாதம் முதல் தேதியிலிருந்து மேட்டூர் அணை திறந்தால் குறுவை சாகுபடிக்கு தேவையான தண்ணீர் கிடைக்கும். அதன் காரணமாக விவசாயிகள் தாங்கள் பயிரிடும் விளை நிலங்கள் மூலம் விளைச்சலை அதிகம் பெற்று பயனடைவர்.

எனவே, தமிழக விவசாயிகளின் சாகுபடிக்கு ஜூலை மாதம் முதல் அக்டோபர் மாதம் 10-ஆம் தேதி அறுவடை வரை மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறப்பதற்கு மத்திய, மாநில அரசுகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். கர்நாடக மாநிலத்தில் கடந்த 10-ஆம் தேதி முதல் கடலோர மாவட்ட பகுதிகளிலும், காவிரி நீர்பிடிப்பு பகுதிகளிலும் மழை பெய்து வருகிறது. இதனால், கர்நாடகத்தில் உள்ள அனைத்து அணைகளுக்கும் நீர்வரத்து அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. இந்தப் பருவ மழை தொடர்ந்து நீடித்தால் மேட்டூர் அணை நிரம்ப வாய்ப்பு உள்ளது. இதைக் கவனத்தில் கொண்டு இந்த வருட குறுவை சாகுபடிக்கு ஜூலை மாதத்திலாவது மேட்டூர் அணையைத் திறப்பதற்கு போர்க்கால அடிப்படையில் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

**பெரியாறு பாசன முதல்போக சாகுபடிக்கு தண்ணீர் திறக்க வேண்டுகோள்**

பெரியாறு பாசனத் திட்டத்தில் மதுரை மாவட்டத்தின் இருபோக சாகுபடி பகுதியின் முதல் போகத்துக்கு ஜூலை 1 ஆம் தேதி தண்ணீர் திறந்துவிட நடவடிக்கை எடுக்குமாறு பெரியாறு பாசன விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பெரியாறு பாசனத் திட்டத்தின் முதல்போகத்தில் பேரணை முதல் கள்ளந்திரி வரை 45 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறுகின்றன.

மதுரை மாவட்டத்தின் மதுரை வடக்கு, வாடிப்பட்டி ஆகிய தாலுகாக்களும், திண்டுக்கல் மாவட்டத்தின் நிலக்கோட்டை தாலுகாவும் இதில் அடங்கும். முதல்போக பாசனத்துக்கு ஜூன் முதல் வாரத்தில் தண்ணீர் திறப்பது வழக்கம். அணைகளின் நீர்இருப்பு போதிய அளவுக்கு இல்லாத காரணத்தால், கடந்த சில ஆண்டுகளாக முதல்போகத்துக்குத் தண்ணீர் திறப்பது தாமதமாகி வருகிறது. இந்நிலையில், நடப்பு ஆண்டுக்கான முதல்போக சாகுபடிக்கு ஜூலை 1 ஆம் தேதிக்குத் தண்ணீர் திறக்க நடவடிக்கை எடுக்குமாறு பெரியாறு பாசனத் திட்டக்குழு கோரிக்கை விடுத்துள்ளது. திட்டக்குழுத் தலைவர் எம்.முருகன், உறுப்பினர்கள் ஜி.முருகன், பரந்தாமன், அருள்பிரகாசம், திருப்பதி உள்ளிட்டோர் கோரிக்கை மனுவை மாவட்ட ஆட்சியர் எல்.சுப்பிரமணியனிடம் புதன்கிழமை வழங்கினர்.

இதுதொடர்பாக திட்டக்குழு விவசாயிகள் கூறியது: தென்மேற்கு பருவமழை தொடர்ந்து பெய்து வருவதால் பெரியாறு அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. முதல் போகத்துக்கு தண்ணீர் திறப்பதற்கான சூழல் ஏற்பட்டிருக்கிறது. அதோடு, கோடை மழை காரணமாக சாகுபடி பகுதிகளிலும் நீர்நிலைகளில் ஓரளவுக்குத் தண்ணீர் இருக்கிறது. ஆகவே, முதல்போகத்துக்கு தண்ணீர் திறக்கும்பட்சத்தில் சிக்கனமாகப் பயன்படுத்தி சாகுபடி செய்ய முடியும்.

ஆகவே, ஜூலை 1 ஆம் தேதி தண்ணீர் திறப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும். அப்போது தான் வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்பு அறுவடை செய்து முடிக்க முடியும் என்றனர்.

**மண் இல்லாமல் நீரில் பசுந்தீவனம் வளர்க்கும் மையம் திறப்பு**



மாதவரத்தில் ரூ.28 லட்சம் செலவில் அமைக்கப்பட்ட பசுமைக் குடில் வாயிலாக பசுந்தீவனம் உற்பத்தி செய்யும் மையத்தை தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத் துணைவேந்தர் சு.திலகர் புதன்கிழமை தொடக்கி வைத்தார். தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக ஆராய்ச்சி பண்ணையில் புதன்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் பசுந்தீவன உற்பத்தி மையத்தைத் தொடக்கி வைத்து அவர் பேசியதாவது: தேசிய வேளாண் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.28 லட்சம் செலவில் பசுமைக் குடில் மூலம் பசுந்தீவன உற்பத்தி மையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மையத்தில், மண் இல்லாமல் பசுமைக் குடில் வாயிலாக பசுந்தீவனத்தை உற்பத்தி செய்ய முடியும்.

பசுமைக் குடிலில் உற்பத்தி செய்யப்படும் பசுந்தீவனமானது, ஆண்டு முழுவதும் ஒரே மாதிரியான சீரான தரம், சுவை, சத்துக்கள் நிறைந்து காணப்படும். கல், மண், தூசி, பூச்சி மருந்துகள் ஆகியவை இல்லாமல் இருக்கும்.

இந்த மையத்தில் தேவைக்கு அதிகமான நீர் வீணடிக்கப்படாமல், மறுசுழற்சி முறையில் மீண்டும் பயன்படுத்தப்படுகிறது. மண் இல்லாமல்

நீரில் மட்டுமே கால்நடைகளுக்குத் தேவையான தீவனம் வளர்க்கப்படும். ஒரு கிலோ தீவனம் உற்பத்தி செய்வதற்கு 2 அல்லது 3 லிட்டர் தண்ணீர் போதுமானது. மாறாக, இதே தீவனத்தை நிலத்தில் உற்பத்தி செய்வதற்கு 80 முதல் 90 லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. தற்போது பசுந்தீவன உற்பத்தி, தேவைக்கும் உற்பத்திக்கும் இடையே சுமார் 65 சதவீத இடைவெளி உள்ளது. உற்பத்தியானது 40 சதவீதத்துக்கும் குறைவாகவே உள்ளது. இந்த இடைவெளியைக் குறைக்கும் பல்வேறு முயற்சிகளை தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக, மண் இல்லாமல் நீரில் மட்டுமே பசுந்தீவனம் வளர்க்கும் மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. நாள் ஒன்றுக்கு 300 சதுர அடிப் பரப்பில் ஆயிரம் கிலோ பசுந்தீவனத்தைப் பசுமைக்குடிலில் உற்பத்தி செய்ய முடியும். பசுமைக்குடிலில் வளர்க்கப்படும் பசுந்தீவனமானது, 7 அல்லது 8 நாளில் சுமார் 30 செ.மீட்டர் உயரம் வரை வளர்ந்துவிடும். மக்காச்சோளம், கோதுமை, பார்லி, காராமணி போன்றவற்றை பசுமைக்குடில் முறையில் வளர்க்க முடியும். நீரியல் வளர்ப்பு முறையில் வளர்க்கப்படும் தீவனமானது, மிகவும் சுவையாக இருக்கும். எல்லா மாதிரியான பருவநிலையிலும், கால்நடைகளுக்குத் தரமான பசுந்தீவனத்தை உற்பத்தி செய்ய முடியும். இங்கு வளர்க்கப்படும் தீவனத்தை கால்நடைகள் விரும்பி உண்ணுவதன் மூலம் அடர் தீவனத்தின் அளவைப் பாதியாகக் குறைக்க முடியும். விவசாயிகள் தங்கள் கால்நடைகளுக்குத் தேவையான தீவனங்களை முன்பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம். இந்த முறையில் வளர்க்கப்படும் தீவனங்களுக்கு ஒரு கிலோவுக்கு ரூ.7 முதல் ரூ.8 வரை விற்பனை விலை நிர்ணயம் செய்துள்ளோம். மண்ணில்லா பசுமைக்குடில் வாயிலாக பசுந்தீவன உற்பத்தி பற்றிய கூடுதல் விவரங்களுக்கு 044-25551571 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்றார் அவர்.

**நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

தேனி ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை (ஜூன் 26) காலை 11 மணிக்கு விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடைபெற உள்ளது. ஆட்சியர் ந.வெங்கடாசலம் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில், விவசாயிகள் மற்றும் விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு தங்களது கோரிக்கைகளை தெரிவித்து தீர்வு காணலாம் என மாவட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வைகை அணைக்கு மீண்டும் தண்ணீர் வரத்து தொடக்கம்**

நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் சாரல் மழை பெய்து வருவதால் வைகை அணைக்கு தண்ணீர் வரத்து மீண்டும் செவ்வாய்க்கிழமை காலை முதல் தொடங்கியுள்ளது.

வைகை அணைக்கு கடந்த ஜூன் 9ஆம் தேதி முதல் தண்ணீர் வரத்து இல்லாததால், அணையின் நீர்மட்டம் குறைந்து வந்தது. இந்நிலையில் தேனி மாவட்டத்தில் அணையின் நீர்ப் பிடிப்பு பகுதிகளில் சிலநாள்களாக தொடர்ந்து சாரல் மழை பெய்து வருவதால் மீண்டும் தண்ணீர் வரத்து தொடங்கியுள்ளது. வைகை அணைக்கு செவ்வாய்க்கிழமை காலை முதல் 81 கன அடி தண்ணீர் வரத்து உள்ளது. அணைகளின் நீர் மட்டம்: முல்லைபெரியாறு அணைக்கு விநாடிக்கு நீர் வரத்து 4369 கன அடியாகவும், தண்ணீர் வெளியேற்றம் 400 கன அடியாகவும் உள்ளது. வைகை அணைக்கு வினாடிக்கு தண்ணீர் வரத்து 81 கன அடியாகவும், தண்ணீர் வெளியேற்றம் 60 கன அடியாகவும் உள்ளது.

**நீர்வள நிலவள திட்டப் பணிகள்: உலக வங்கிக் குழுவினர் ஆய்வு**

அருப்புக்கோட்டை வட்டார செங்கோட்டையாறு துணை வடிநிலப் பகுதியில், நீர்வள நிலவளத் திட்டத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளை, உலக வங்கிக் குழுவினர் புதன்கிழமை ஆய்வு செய்தனர்.

டோனி தலைமையிலான உலக வங்கிக் குழுவினர், வேளாண் துறை இணை இயக்குநர் (பொறுப்பு) செண்பகமூர்த்தி, கூடுதல் வேளாண்மை இயக்குநர் குணசேகரன், வேளாண் வணிக துணை இயக்குநர் முத்துமுனியாண்டி உள்ளிட்ட அதிகாரிகளுடன் சென்று, செங்கோட்டையாறு துணை வடிநிலப் பகுதியில் ஆய்வு செய்தனர். அதில், விவசாயிகள் பயனடையும் வகையில், தானியங்களை சேமித்து வைக்க ரூ. 7.15 லட்சத்தில் அமைக்கப்பட்டுள்ள சேமிப்புக் கிட்டங்கி, உலர் களம் மற்றும் விவசாய ஆர்வலர் குழுக்களின் செயல்பாடு உள்ளிட்டவைகளை பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

இந்த கிட்டங்கி மூலம், இப்பகுதியில் உள்ள 103 விவசாயிகள் பயன்பெற்றுள்ளனர். இக்கிட்டங்கி, விவசாய ஆர்வலர் குழு கட்டுப்பாட்டில் செயல்படுகிறது. இங்கு, 94 டன் தானிய மூட்டைகள் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. இதற்காக, ஒரு மாதத்துக்கு குறைந்தபட்ச வாடகையாக ரூ. 2 மட்டுமே வசூலிக்கப்படுகிறது.

இங்கு, குறைந்தது 6 மாதம் வரை தானியங்களை சேமித்து வைக்கமுடியும். சேமித்து வைத்துள்ள தானியங்களுக்கு அருகில் உள்ள வாழ்வாங்கி கிராமத் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மூலம் பொருளீட்டுக் கடனும் பெற்றுத் தரப்படுகிறது.

இதனால், அறுவடை செய்த தானியங்களை களத்து மேட்டில் விற்பனை செய்யாமல், இருப்பு வைத்து விற்பதால் தரகு, எடைக் கமிஷன் இல்லாமல் 10 முதல் 12 சதவீதம் கூடுதலாக லாபம் பெறுவதாக, உலக வங்கிக் குழுவினரிடம் விவசாயிகள் தெரிவித்தனர்.

இதற்கான ஏற்பாடுகளை, வேளாண் வணிக அலுவலர்களான காய்த்ரிதேவி, சந்திரசேகரன், உதவி வேளாண்மை அலுவலர் மகேஷ்பாபு உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

**விவசாயிகளுக்கு காளான் வளர்ப்பு பயிற்சி**

திருவாடானை தாலுகா காடாங்குடி கிராமத்தில் வேளாண்மை தொழிநுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு காளான் வளர்ப்பு பண்ணைப்பள்ளி பயிற்சி முகாம் நடைபெற்றது.

திருவடானை தாலுகா காடாங்குடி கிராமத்தில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை விரிவாக்க திட்டத்தின் கீழ் காளான் வளர்ப்பு பண்ணைப்பள்ளி பயிற்சி முகாம் நடைபெற்றது. திருவாடானை வேளாண்மை உதவி இயக்குநர் நாகராஜ் தலைமை வகித்தார்.

வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்ட தலைவர் பாண்டி சிறப்புரையாற்றினார்.

ராமநாதபுரம் கடலோர உழவர் ஆராய்ச்சி மைய பேராசிரியர் ராம்குமார், காளான் கூடாரம் அமைத்தல், காளான் வளர்ப்பு முறைகள், பாதுகாப்பு முறைகளை பற்றி விளக்கவுரையாற்றினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் சூர்யா நன்றி கூறினார். ஏற்பாடுகளை தொழில்நுட்ப வல்லுநர்கள் ராஜேஸ்வரி, இளையராஜ் ஆகியோர் செய்திருந்தனர்.

**விளைபொருள்கள் வரத்தை அதிகரிக்க நாளை ஒருங்கிணைப்புக் கூட்டம்**

ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களுக்கு விளைபொருள்கள் வரத்து அதிகரிப்பது தொடர்பாக வருகிற 26-ஆம் தேதி ஒருங்கிணைப்புக் கூட்டம் நடைபெற உள்ளதாக தருமபுரி மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன் தெரிவித்தார்.

இதுகுறித்து, அவர் புதன்கிழமை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தமிழக அரசு வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு விவசாயிகள் விளைபொருள்களை அதிக அளவில் கொண்டு வருவதை ஊக்குவித்திடவும், அவ்வாறு கொண்டு வரப்படும் விளைபொருள்களை

உரிமம் பெற்றுள்ள வியாபாரிகள் அதிக அளவில் கொள்முதல் செய்யவும் பல்வேறு நடவடிக்கைககளை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தருமபுரி மாவட்டத்தில் செயல்பட்டுவரும் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் விளைபொருள்கள் வரத்து மற்றும் விற்பனையை அதிகரித்திட ஏதுவாக, விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் ஒருங்கிணைப்பு கூட்டம் வருகிற 26-ஆம் தேதி 4 மணியளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

எனவே, விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என்றார்.

**விதை விற்பனையாளர்கள் கருத்தரங்கம்**

ஆத்தூரில் விதை விற்பனையாளர்கள் கருத்தரங்கம் செவ்வாய்க்கிழமை விதை இயக்குநர் சுந்தர் தலைமையில் நடைபெற்றது.

இதில் தலைவாசல் விதை ஆய்வாளர் எஸ்.வெங்கடேசன் விதைகள் சட்டம், விதிகள், பதிவேடுகள், ஆவணங்கள் பராமரித்தல் பற்றி விளக்கினார். நிகழ்ச்சியில் தரமான விதை உற்பத்தி, அதற்கான கட்டுப்பாடுகள் குறித்தும், உரம், பூச்சி மருந்து விற்பனை, இருப்பு பதிவு செய்தல் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது.

கருத்தரங்கில் வேளாண்மை இணை இயக்குநர் என்.இளங்கோ, விதை ஆய்வு துணை இயக்குநர் செளந்தரராஜன் மற்றும் 200- க்கும் மேற்பட்ட விற்பனையாளர்கள் கலந்து கொண்டனர். ஆத்தூர் விதை ஆய்வாளர் தாமரைச்செல்வன் நன்றி கூறினார்.

**வளங்களை பாதுகாக்க அறம் சார்ந்த வாழ்க்கை முறை தேவை**

பொது வளங்களைப் பாதுகாக்க அறத்துடன் கூடிய வாழ்க்கை முறை தேவை என்றார் இயற்கை ஆர்வலர் ராஜ்குமார்.

புதுக்கோட்டை செல்வா நகரில் சூழலியல் உரிமைக்கான இளையோர் அமைப்பின் சார்பில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சமூக சூழலியல் நீதி குறித்த மாவட்ட அளவிலான கருத்தரங்கில் அவர் மேலும் பேசியது:

பொது வளங்களை பாதுகாக்க அறத்துடன் கூடிய வாழ்க்கை முறை தேவை. நம் சித்தர்கள் கொடுத்த வரமான நாம் செய்யும் யோகா உடல், மனதுக்கான ஆற்றலை கொடுப்பதோடு, இயற்கை வளங்களை பாதுகாப்பதற்கான வாழ்க்கை முறையையும் கற்றுக்கொடுக்கிறது. அதுதான் இன்றைய தேவையும் ஆகும்

என்றார்.

இதையடுத்து, கருத்தரங்கில் பங்கேற்ற இளையோர்கள்,பெருஞ்சுனை கிராமத்தில் உள்ள சுனையை சுத்தம் செய்தனர். சுனையைச் சுற்றியுள்ள பாறையை சமூக விரோதிகள் சிலர் தவறாக பயன்படுத்தியதால் குவிந்து கிடந்த காலி பாட்டில்கள் பழைய துணி, பிளாஸ்டிக் காகிதங்கள் போன்ற சுமார் 1 டன் குப்பைகளை அகற்றி சுத்தம் செய்தனர்.

மேலும், அடுத்த மாத இறுதிக்குள், பெருங்குடி பூவம்பட்டி, மாணிக்கம்பட்டி, வடசேரிப்பட்டி ஆகிய ஊர்களில் உள்ள குடிநீர் ஊருணியைச் சுத்தம் செய்வது, பயன்தரும் மரங்களை நடவு செய்து பாதுகாப்பது, கிராமப் பள்ளிகளில் மூலிகை,காய்கறி தோட்டம் அமைத்து பள்ளிக் குழந்தைகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவது போன்ற பொது வள ஆதாரங்களைப் பாதுகாக்கும் பணிகளில் ஈடுபடுபடப் போவதாக இளையோர்கள் தெரிவித்தனர்.

இதில், ரோஸ் நிறுவனர் ஆர். ஆதப்பன், இளையோர் அமைப்பின் நிர்வாகிகள் கோபி, ராஜ்குமார், வெண்ணிலா, சாரதா, நித்யா, மற்றும் பெருஞ்சுனை,மாணிக்கம்பட்டி, புதுக்குடி, பூவம்பட்டி, பாலக்குடி, காவேரிநகர் ஆகிய கிராமங்களைச் சார்ந்த 41 இளையோர்கள் மற்றும்

ரோஸ் நிறுவன பொறுப்பாளர்கள் அகிலா, விஜயா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**தேசிய தோட்டக்கலை திட்டத்தில் பயன்பெற விவசாயிகள் பதிவு செய்து கொள்ளலாம்**

பெரம்பலூர் மாவட்டத்தில் தோட்டக்கலைத்துறை மூலம் செயல்படுத்தப்படும் தேசிய தோட்டக்கலை திட்டத்தில் பயன்பெற விவசாயிகள் தங்களது பெயரை பதிவு செய்துகொள்ள வேண்டும் என்றார் மாவட்ட ஆட்சியர் (பொ) ப. மதுசூதன் ரெட்டி.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

ஒருங்கிணைந்த தோட்டக்கலை மேம்பாட்டு இயக்கத்தின் கீழ், தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்துக்கு 205-16 ஆம் ஆண்டுக்கு ரூ. 1,68,267 கோடி நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தில், மா அடர் நடவிற்கு ரூ. 2.952 கோடியும், மா இயல்பான நடவிற்கு ரூ. 7.68 லட்சமும், எலுமிச்சை சாகுபடிக்கு ரூ. 1.80 லட்சமும், வீரிய காய்கறிகள் சாகுபடி செய்ய ரூ. 15 லட்சமும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. மானியத் தொகைக்கு விவசாயிகளுக்கு நடவு மற்றும் இடுபொருள்கள் வழங்கப்பட உள்ளது. திசு வாழை சாகுபடிக்கு ரூ. 6.150 லட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. மலர் இனத்தில் இதர விவசாயிகளுக்கு கிழங்கு வகை (சம்பங்கி) மலர்கள் சாகுபடிக்கு ரூ. 9.375 லட்சமும், உதிரி மலர்கள் (சாமந்தி பூ, கனகாம்பரம், மல்லிகை) சாகுபடிக்கு ரூ. 3 லட்சமும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. மிளகாய் சாகுபடிக்கு ரூ. 1.20 லட்சமும், மஞ்சள் சாகுபடிக்கு ரூ. 3 லட்சமும், பெரிய வெங்காயம் சாகுபடிக்கு ரூ. 36 லட்சமும் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.

பாதுகாக்கப்பட்ட சாகுபடி இனத்தின் கீழ், பாலித்தீன் பசுமைக் குடில் அமைக்க ரூ. 4.45 லட்சமும், நிழல் வலை அமைக்க ரூ. 7.10 லட்சமும், நெகிழி மூடாக்கு அமைக்க ரூ. 9.60 லட்சமும் மண் புழு உரம் தயாரித்தல்

இனத்தில் நிரந்தர அமைப்பு தொட்டி அமைத்து மண்புழு உரம் தயாரிக்கரூ. 2.50 லட்சமும், தாற்காலிக அமைப்புக்கு ரூ. 40 லட்சமும் மானியம் வழங்கப்பட உள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

**மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வுப் பேரணி**

கோவில்பட்டியில் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வுப் பேரணி நடைபெற்றது.

கோவில்பட்டி எவரெஸ்ட் மாரியப்ப நாடார் மேல்நிலைப் பள்ளி வளாகத்திலிருந்து புறப்பட்ட இப்பேரணியை, பள்ளி ஆசிரியர் ராஜசேகர் கொடியசைத்து தொடங்கிவைத்தார். பேரணி, எட்டயபுரம் சாலை, பழனி ஆண்டவர் கோயில் தெரு, மில் தெரு, பிரதான சாலை, புதுரோடு வழியாக சென்று பள்ளி வளாகத்தில் நிறைவடைந்தது. பேரணியில்,

**யோகா, இயற்கை உணவு குறித்து பாடத்திட்டத்தில் சேர்க்க வேண்டும்**

யோகாவும், இயற்கை உணவும் இணைந்தால் மக்கள் உடல் நலத்துடனும், மன உறுதியுடனும் வாழலாம். எனவே யோகா, இயற்கை உணவு குறித்து பாடத்திட்டத்தில் சேர்க்க வேண்டும் என திருநெல்வேலியில் நடைபெற்ற கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டது.

சர்வதேச யோகா தினத்தையொட்டி, நல்வாழ்வு இயற்கை மருத்துவம் மற்றும் யோகா மையம் சார்பில் யோகா விழிப்புணர்வுக் கருத்தரங்கம், இலவச இயற்கை மருத்துவ ஆலோசனை முகாம் திருநெல்வேலி நகரில் உள்ள நல்வாழ்வு யோகா மையத்தில் நடைபெற்றது. கருத்தரங்குக்கு மையத்தின் மருத்துவர் கு. அழகியநம்பி தலைமை வகித்தார். நோய் தீர்க்கும் யோகா மருத்துவம் என்ற தலைப்பில், இயற்கை மருத்துவர் ரா. நல்வாழ்வு, மகளிர் பிரச்னைகளும், யோகா தீர்வுகளும் என்ற தலைப்பில் மருத்துவர் செ. சுமங்கலி, உடல் ஆரோக்கியமும், யோகாவும் என்ற தலைப்பில் இயற்கை ஆர்வலர் பாமரதீபம் ந. பார்த்தீபன் ஆகியோர்

பேசினர். கருத்தரங்கில், நீரிழிவு, உயர்ரத்த அழுத்தம், உடல் பருமன், மூட்டு வலி, முதுகு வலி, ஆஸ்துமா, தைராய்டு, சிறுநீரக நோய்கள், குழந்தையின்மை மற்றும் மன உளைச்சல் உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்கும் இயற்கை மருத்துவம் குறித்த ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

யோகா, இயற்கை உணவு குறித்த பாடத்திட்டத்தை பள்ளிக்கல்வி முதலே பயிற்றுவிக்க வேண்டும் என்று கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டது. இயற்கை மருத்துவர்களின் யோகா குறித்த செயல்முறை பயிற்சி நடைபெற்றது. இயற்கை ஆர்வலர்கள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர். ஒருங்கிணைப்பாளர் இரா. வேல்முருகன் வரவேற்றார். மைய இயக்குநர் ரா. வேல்முருகன் நன்றி கூறினார்.

**கார் பருவம்: 23 ஆயிரம் ஹெக்டேரில் நெல் நடவு செய்ய இலக்கு**

நிகழ் கார் பருவத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் 23 ஆயிரம் ஹெக்டேரில் நெல் நடவு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக வேளாண் இணை இயக்குநர் செ. சந்திரசேகரன் புதன்கிழமை தெரிவித்தார்.

கார் பருவ சாகுபடிக்கு பாபநாசம், சேர்வலாறு அணைகளிலிருந்து இம்மாதம் 16 ஆம் தேதி தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதையடுத்து திருநெல்வேலி மாவட்டத்தில் பாசனத்திற்காக வடக்கு மற்றும் தெற்கு கோடைமேலழகியான் கால்வாய், கோடகன் கால்வாய் ஆகிய கால்வாய்கள் மூலம் பாசனம் பெறும் நிலங்களுக்கு உடனடியாக தண்ணீர் திறக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து சாகுபடி பணிகளை முழு வீச்சில் விவசாயிகள் மேற்கொண்டுள்ளனர். கன்னடியன் கால்வாய், நதியுன்னி கால்வாய்களில் பாலம் கட்டும் பணிகள் நடைபெற்று வருவதால் தாமதமாக திறக்கப்பட்டது. கார் சாகுபடி பணிகள் இம்மாவட்டத்தில் தீவிரமடைந்துள்ளது. திருநெல்வேலி வேளாண் இணை இயக்குநர் செ. சந்திரசேகரன் கூறியதாவது: கார் பருவ சாகுபடி

பணிகள் திருநெல்வேலி மாவட்டத்தில் தொடங்கப்பட்டுள்ளது. முதல் கட்டமாக அம்பாசமுத்திரம், சேரன்மகாதேவி, முக்கூடல், கடையம், ஆழ்வார்குறிச்சி, தென்காசி, செங்கோட்டை உள்ளிட்ட பகுதியில் விவசாயிகள் நாற்று பாவும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இதுவரை 450 ஹெக்டேரில் நாற்று பாவப்பட்டுள்ளது. நிகழ் கார் பருவத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் 23 ஆயிரம் ஹெக்டேரில் நெல் நடவு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பாசனத்திற்கு தேவையான யூரியா உள்ளிட்ட உரங்கள் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. பாசனத் தேவைக்கு தட்டுபாடு இல்லாமல் உரங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மணிமுத்தாறு பாசனத்தில் நடவு செய்யப்பட்டு 45 நாள்கள் பருவத்தில் நெல் பயிர் உள்ளது. சிவகிரி பகுதியில் குளங்களில் இருப்பு இருந்த நீரை கொண்டு சுமார் 1,500 ஹெக்டேரில் நெல் நடவு செய்யப்பட்டு தற்போது அறுவடை செய்யும் பருவத்தில் உள்ளது என்றார் அவர்.

நெல்லையில் தாமதம்: திருநெல்வேலி கால்வாய், பாளையம் கால்வாய் ஆகிய கால்வாய்கள் மூலம் பாசனம் பெறும் நிலங்களுக்கு இன்னும் தண்ணீர் திறக்காத நிலையில் சாகுபடி பணிகளில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

**அடவிநயினார், கொடுமுடியாறு அணைகளின் நீர்மட்டம் உயர்வு**

மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்பிடிப்புப் பகுதியில் பெய்து வரும் மழையால் அடவிநயினார், கொடுமுடியாறு, கருப்பாநதி அணைகளின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. புதன்கிழமை காலை நிலவரப்படி மழையளவு (மில்லி மீட்டரில்): பாபநாசம் அணை -34, பாபநாசம் கீழ் அணை- 13, சேர்வலாறு அணை- 7, கடனாநதி அணை-1, கருப்பாநதி அணை-12, குண்டாறு அணை-6, அடவிநயினார்-9, கொடுமுடியாறு-25, செங்கோட்டை-4.1, தென்காசி-7. நீர்வரத்து அதிகரிப்பு: நீர்பிடிப்புப்

பகுதியில் பெய்து வரும் மழையால் அணைகளுக்கு நீர்வரத்து உள்ளது. பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 1,222.11 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையில் இருந்து 1,204.75 கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டது. மணிமுத்தாறு அணைக்கு விநாடிக்கு 134 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையிலிருந்து பெருங்கால் மதகில் 75 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது.

சேர்வலாறு அணை நீர்மட்டம் 73.98 அடியாகவும், கடனாநதி அணை நீர்மட்டம் 2 அடி உயர்ந்து 55 அடியாகவும், ராமநதி அணையின் நீர்மட்டம் 46 அடியாகவும், கருப்பாநதி அணை நீர்மட்டம் 3.61 அடி உயர்ந்து 53.81 அடியாகவும், குண்டாறு அணை நீர்மட்டம் 16.07 அடியாகவும், அடவிநயினார் நீர்மட்டம் 4 அடி உயர்ந்து 54 அடியாகவும், வடக்குப் பச்சையாறு அணை நீர்மட்டம் 27 அடியாகவும், நம்பியாறு அணைநீர்மட்டம் 12.63 அடியாகவும், கொடுமுடியாறு அணை நீர்மட்டம் மேலும் 5 அடி உயர்ந்து 34 அடியாகவும் இருந்தது.

கடனாநதி அணைக்கு விநாடிக்கு 106 கனஅடியும், கருப்பாநதி அணைக்கு விநாடிக்கு 124 கனஅடியும், கொடுமுடியாறு அணைக்கு விநாடிக்கு 144 கனஅடியும் நீர்வரத்து இருந்தது. கடனாநதி அணையிலிருந்து 60 கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

அருவிகளில் நீர்வரத்து: நீர்பிடிப்புப் பகுதியில் நீடித்து வரும் மழையால் அருவிகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. பாபநாசம் அகஸ்தியர் அருவி, மணிமுத்தாறு அருவிகளில் வழக்கத்தை விட கூடுதலாக நீர்வரத்து இருந்தது. சீசனை அனுபவிக்க குற்றாலத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் பாபநாசம், மணிமுத்தாறு அருவிகளில் வழக்கத்தை விட கூட்டம் அதிகமாக இருந்தது.

**மண் மாதிரி சேகரிப்பு முகாம்**

காணை அருகே உள்ள பெரும்பாக்கத்தில் மண் மாதிரி சேகரிப்பு முகாம் அண்மையில் நடைபெற்றது.

முகாமுக்கு மாவட்ட ஆட்சியர் வா.சம்பத் தலைமை வகித்துப் பேசியது: மண்ணை பரிசோதிக்காமல் தேவைக்கு அதிகமாக உரம் மற்றும் பூச்சி மருந்துகளை பயன்படுத்தியதன் விளைவாக மண்வளம் பாதிக்கப்பட்டு மண்ணின் அங்கத்தன்மை நன்மை செய்யும் காரணிகளின் செயல்பாடு குறைகிறது.

மண்ணில் உப்பு மற்றும் காரத் தன்மை அதிகமாகி விவசாய உற்பத்தி பாதிக்கப்படுகிறது. மண் பரிசோதனை மூலம் தேவையான உரங்களை இட வேண்டும் என்றார்.

வேளாண் இணை இயக்குநர் அ.ரத்தினசபாபதி பேசுகையில், இத் திட்டம் விழுப்புரம் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு இதுவரை 10 ஆயிரம் மண் மாதிரிகள் அனைத்து வட்டாரங்களிலும் சேகரிக்கப்பட்டுள்ளன. இந்த மண் மாதிரிகள் நீர்ப் பாசனப் பரப்புகளில் ஒவ்வொரு 2.5 ஹெக்டேருக்கு ஒரு மண் மாதிரியும், மானாவாரி பரப்பில் ஒவ்வொரு 10 ஹெக்டேருக்கு ஒரு மண் மாதிரியும் சேகரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு அனைத்து விவசாயிகளுக்கு மண்வள அட்டை வழங்கப்படும்.

இந்த மண் வள அட்டையில் விவசாயின் விவரங்கள், சாகுபடி செய்ய வேண்டி பயிர்களின் விவரம், உரப்பரிந்துரைகள் மற்றும் பாதிக்கப்பட்ட மண்ணை மேம்படுத்துவதற்கான தொழில் நுட்பங்கள் குறிப்பிட்டு அனைத்து விவசாயிகளுக்கும் அளிக்கப்படும்.

மண் மாதிரிகள் குறித்து புவியியல் சார்ந்த குறியீட்டுடன் சர்வே எண் வாரியாக எடுக்கப்பட்டு ஒவ்வொரு கிராமத்துக்கும் மண்ணில் உள்ள சத்துகளின் இன்றைய நிலை குறித்த கிராம வரைபடம் தயாரிக்கப்பட்டு மண்ணில் உள்ள சத்துக்கள் மற்றும் பாதிப்படைந்த மண்ணை

மேம்படுத்துவதற்கான திட்டங்கள் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட உள்ளன என்றார்.

கூட்டத்தில் மண்மாதிரி சேகரிப்பு முறை குறித்து வேளாண் உதவி இயக்குநர் (தரக் கட்டுப்பாடு) ஆர்.எம்.ராமசாமி, வேளாண்மை அறிவியல் நிலையத்தின் உதவிப் பேராசிரியர் ம.பாலுமகேந்திரன் மற்றும் வேளாண்மை அலுவலர் டி.சுப்பிரமணியன், எஸ்.ஷோபனா ஆகியோர் விவசாயிகளுக்கு செயல் விளக்கம் அளித்தனர்.

முகாமில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்), வி.ஆறுமுகம், வேளாண் உதவி இயக்குநர் குமாரிஆனந்தி, தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் க.அன்பழகன், வேளாண் அலுவலர்கள் கதிரேசன், கு.சௌந்தர்ராஜன், செந்தில்குமார், பெரும்பாக்கம் ஊராட்சிமன்றத் தலைவர் ஆர்.லட்சுமி உள்பட பலர் பங்கேற்றனர்.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

**கர்நாடகாவில் நீர் திறப்பு: மேட்டூருக்கு நீர் அதிகரிக்க வாய்ப்பு**

மேட்டூர்: கர்நாடக மாநிலம் கபினி, கே.ஆர்.எஸ்., அணைகளில் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால் வரும் நாட்களில் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிக்க வாய்ப்புள்ளது.காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளதால் கர்நாடகாவிலுள்ள கபினி, கிருஷ்ணராஜ சாகர் (கே.ஆர்.எஸ்.,) அணை களுக்கு நீர்வரத்து அதிகரித்து உள்ளது.நேற்று முன்தினம் வினாடிக்கு 15 ஆயிரத்து 500 கனஅடியாக இருந்த கபினி நீர்வரத்து நேற்று 18 ஆ1யிரத்து 900 கனஅடி யாகவும், 25 ஆயிரத்து 800 கனஅடியாக இருந்த கே.ஆர்.எஸ்., நீர்வரத்து

நேற்று வினாடிக்கு 29 ஆயிரத்து 500 கனஅடியாகவும் அதிகரித்தது. கபினி நிரம்ப 5 டி.எம்.சி., நீர் மட்டுமே தேவை. இதனால் கபினியில் இருந்து, நடப்பாண்டில் முதற்கட்டமாக, நேற்று வினாடிக்கு 3,000 கனஅடி நீரும், கே.ஆர்.எஸ்., அணையில் இருந்து வினாடிக்கு 9,000 கனஅடி நீரும் காவிரியில் வெளியேற்றப்பட்டது. இரு அணைகளில் இருந்தும் திறக்கப்படும் நீர் நேரடியாக மேட்டூர் அணைக்கு வரும். கபினியில் இருந்து 241 கி.மீ., துாரத்திலும், கே.ஆர்.எஸ்., அணையில் இருந்து 182 கி.மீ., துாரத்திலும் மேட்டூர் அணை உள்ளது. இதனால் மூன்று நாட்களுக்கு பின் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.நேற்று மேட்டூர் அணை நீர்மட்டம் 74.5 அடியாகவும், நீர் இருப்பு 36.7 டி.எம்.சி.,யாகவும் இருந்தது. வினாடிக்கு 1,449 கனஅடி நீர் அணைக்கு வந்து கொண்டிருந்தது. தண்ணீர் திறக்க எதிர்ப்பு: கே.ஆர்.எஸ்., அணையிலிருந்து தமிழகத்துக்கு தண்ணீர் விடுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, மாண்டியாவில் மைசூரு - - பெங்களூரு ரோட்டில், விவசாயிகள் சாலை மறியலில் ஈடுபட்டனர். இதனால், போக்குவரத்து

பாதிக்கப்பட்டது.

**கழுத்தில் 'துாக்கு கயிறு'**

பெங்களூருவில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற முன்னாள் பிரதமர் தேவகவுடா பேசியதாவது:

காவிரி நதிநீர் பங்கீடு விஷயத்தில் கர்நாடக மக்களின் 'கழுத்தில் துாக்குக்கயிறு' போடப்பட்டுள்ளது. கயிறு இன்னும் இறுக்கப்படவில்லை. எப்போது கயிறு இறுகும் என்பது தெரியாது. இது குறித்து அரசியல்வாதிகளுக்கு புரியவில்லை. மவுனமாக இருக்கின்றனர். தற்போது, பெங்களூருவுக்கு 11 டி.எம்.சி., தண்ணீர் கிடைக்கிறது.

பெங்களூருவின் மூன்றில் இரண்டு பங்கு மக்களுக்கு மட்டுமே, காவிரி தண்ணீர் கிடைக்கிறது. அரசியல்வாதிகளும், மக்களும் எச்சரிக்கை அடையவில்லை. இனியும் விழித்துக்கொள்ளாமல் அலட்சியம் காட்டினால், எதிர்காலத்தில் குடிநீர் பிரச்னை தீவிரமாகும். விஸ்வேஸ்வரய்யா கே.ஆர்.எஸ்., அணையை கட்டிய சந்தர்ப்பத்தில் செய்து கொண்ட ஒப்பந்தம், கர்நாடகாவுக்கு சாதகமாக இல்லை. இது குறித்து நீர்ப்பாசன வல்லுனர்கள் ஆய்வு செய்துள்ளனர். இவ்வாறு, அவர் பேசினார்.

**வால்பாறையில் கன மழை**

சென்னை: 'தமிழகம் மற்றும் புதுச்சேரியில், அடுத்த 24 மணி நேரத்துக்கு, ஓரிரு இடங்களிலும், சென்னையில், மாலை அல்லது இரவு நேரங்களில், ஓரிரு இடங்களிலும் லேசான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது' என, வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. நேற்று அதிகபட்சமாக கோவை - வால்பாறையில் 10 செ.மீ.,யும் குறைவாக, திருவாரூரில் 1 செ.மீ.,யும் மழை பதிவாகியது.

**உள்ளூர் பீட்ரூட் ரூ.19 ஊட்டி பீட்ரூட் ரூ.60**

ஒட்டன்சத்திரம்: ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் உள்ளூர் பீட்ரூட் விலை அதிகரித்து கிலோ ரூ.19க்கு விற்றது. ஆனால் வெளியில் ஊட்டி பீட்ரூட் கிலோ ரூ.60க்கு விற்கப்படுகிறது.பல மாதங்களாக பீட்ரூட் விலை மாற்றமின்றி அதே விலைக்கு விற்றது. இந்நிலையில் கோடை மழை பெய்த தால், பீட்ரூட் மகசூல் பாதிக்கப்பட்டது. பறிக்கப்படும் காய்களும் தரமின்றி காணப்பட்டது. மார்க்கெட்டில் வரத்து குறையத் தொடங்கியதால், விலை ஏறுமுகமாக காணப்பட்டது.வியாபாரி ஒருவர் கூறுகையில்,“ தற்போது மார்க்கெட்டில் பீட்ரூட்டின் மொத்த கொள்முதல் விலை, கிலோவுக்கு ரூ.19 ஆக உள்ளது. ஆனால் வெளி மார்க்கெட்டில்

இந்த பீட்ரூட் ரூ.30க்குமேல் விற்கிறது," என்றார். அதேசமயம் ஊட்டி பகுதிகளில் விளைந்த பீட்ரூட் நல்ல தரமாக இருப்பதால், வெளியில் உள்ள கடைகளில் கிலோ ரூ.60க்கு விற்கப்படுகிறது.

**மீன் விலை உயர்வு**

ராமநாதபுரம்: படகுகள் மீன்பிடிக்க கடலுக்குச் செல்லாததால், கூண்டு வலை, அடைப்பு வலைகளில் பிடிக்கப்படும் மீன் களுக்கு கடும்கிராக்கி ஏற்பட்டு, விலை உயர்ந்து உள்ளது.ராமேஸ்வரம், பாம்பன், மண்டபம் பகுதிகளில் சில நாட் களாக சூறாவளி காற்று வீசுவதால், மீனவர்கள் கடலுக்கு செல்லக் கூடாது என மீன்துறை அதிகாரிகள் தடை விதித்து உள்ளனர்.

இதனால், பாக் ஜல சந்தி, மன்னார் வளைகுடா கரை ஓரங்களில் இருந்து கடலுக்குள் 400 மீட்டர் துாரத்தில் 50க்கும் மேற்பட்ட இடங்களில் அடைப்பு வலைகள் மற்றும் கூண்டு வலைகள் மூலம் மீனவர்கள் மீன்பிடித்து வருகின்றனர். இந்த மீன்களுக்கு கடும் கிராக்கி ஏற்பட்டு உள்ளதால், மீனவர்களுக்கு முன் பணம் கொடுத்து, வியாபாரிகள் மீன்களை கொள்முதல் செய்கின்றனர்.இதனால் விலையும் கடுமையாக உயர்ந்து உள்ளது. ஒரு கிலோ சூவா பாரை மீன் ரூ.150, கணவாய் ரூ.160, சிரையா ரூ.200, நகரை ரூ.240, முரல் ரூ.260, நண்டு ரூ.260, விளை மீன் ரூ.350,இறால் ரூ.400, பாரை ரூ.450க்கு விற்கப்படுகிறது. காற்றின் வேகம் குறைந்தாலும், பாக் ஜலசந்தி கடலில் விசைப்படகுகள் வரும் ஜூன் 27 ல் தான் மீன்பிடிக்கச் செல்வர். இதனால் மீன்களின் விலை மேலும் உயரும், என வியா பாரிகள் தெரிவித்தனர்.

**ஒரே தொட்டியில் காய்கறி, பூச்செடிகள் வளர்ப்பு : 'ஹோம் கம்போஸ்ட்' தொட்டிகள் அறிமுகம்**




தேனி: வீடுகளில் காய்கறி தேவையை பூர்த்தி செய்ய வீட்டுகாலி இடங்களில் தோட்டம் அமைப்பது, மாடி வீட்டு தோட்டம் அமைப்பது பிரபலமாகி வருகிறது. நகரங்களில் இடநெருக்கடியால் காலியிடம் இன்றி வீடுகட்டுவோர் ஒரே தொட்டியில் காய்கறி, பழச்செடி, பூச்செடிகள் வளர்த்து பயன்பெற தேனி மாவட்டம் மேல சொக்கநாதபுரம் பேரூராட்சியில் 'ஹோம் கம்போஸ்ட்' தொட்டிகள் உருவாக்கி வழிகாட்டி உள்ளனர். பிளாஸ்டிக் தொட்டியில் போதிய இடைவெளியோடு பல இடங்களில் துளையிடப்படுகிறது. தொட்டியின் மையத்தில் துளைகள் இடப்பட்ட பிளாஸ்டிக் பைப்பை நிறுத்தி, தொட்டியை சுற்றி மண், இயற்கை உரம் அடுக்கடுக்காக 75 சதவீத அளவிற்கு நிரப்புகின்றனர். இடை, இடையே மண்புழுக்களை விடவேண்டும். அதன்பின் தொட்டியில் உள்ள ஒவ்வொரு துளையிலும் நாம் விரும்பும் செடிகளை நட்டு வளர்க்கலாம். ஒரு துளையில் காய்கறி செடி, அடுத்த துளையில் பூச்செடி, அடுத்து பழச்செடி என வித விதமான செடிகளை நட்டு வளர்க்கலாம்.

தேனி மாவட்ட பேரூராட்சிகளின் செயற்பொறியாளர் கருப்பையா கூறியதாவது:தொட்டியின் மைய பைப்பில் நீர் ஊற்றினால் கசிந்து, கசிந்து தொட்டி முழுவதும் உள்ள செடிகள் வளர நீர் கிடைக்கும். மேலும் வீட்டில் சேரும் காய்கறி கழிவுகளையும் துண்டு, துண்டுகளாக வெட்டி தொட்டியில் போட்டால் அவைகளும் மக்கி நீருடன் கலந்து நல்ல உரம் கிடைக்கும். இதன் மூலம் வீட்டின் கழிவுகள் வீதிக்கு வருவதை தடுக்கும்

நோக்கில் 'ஹோம் கம்போஸ்ட்' தொட்டி உருவாக்கி உள்ளோம். இதே போல் காம்பவுண்ட் சுவர்களின் மீது பூச்செடிகள் வளர்க்கலாம். வீடுகளில் எளிமையாக வளர்த்து பயன்பெறலாம். அதோடு ஒரே தொட்டியில் காய்களும், பூக்களும் பூத்தால் அழகுகிற்கு அழகு சேர்க்கும். இதற்கு ஏற்பட்ட வரவேற்பால் சென்னை பேரூராட்சிகளின் இயக்குனர் அலுவலகத்தில் அமைத்துள்ளோம். அதிகபட்சம் ஒரு தொட்டி அமைக்க ரூ.1300 செலவாகும். ஒவ்வொரு வீட்டிலும் வளர்க்கலாம், என்றார். தேனி கலெக்டர் வெங்கடாசலம் ஆய்வு செய்து 'ஹோம் கம்போஸ்ட்' தொட்டிகளை அமைத்த அதிகாரிகளை பாராட்டினார்.

**கோழி வளர்ப்புக்கு மானியம் கலெக்டர் தகவல்**

மதுரை:கோழிப்பண்ணை தொழிலை ஊக்குவிக்க அரசு கோழி வளர்ப்பு திட்டத்தை செயல்படுத்துகிறது.கலெக்டர் சுப்பிரமணியன் கூறியதாவது: நாட்டுக்கோழி பண்ணை கொட்டகை அமைக்க அரசு 25 சதவீதம் மானியம் வழங்குகிறது. தவிர நபார்டு வங்கியின் கோழி துணைகர முதலீட்டு நிதியிலிருந்தும் 25 சதவீதம் மானியமாக வழங்கப்படும். எனவே 50 சதவீத சொந்த செலவிலோ, வங்கி கடனுதவி பெற்றோ பண்ணை அமைக்கலாம்.ஆண்டுமுழுவதும் நாட்டுக்கோழியினை விவசாயிகள் வளர்க்க இரண்டாம் தொகுப்பு கோழிக்குஞ்சுகள் வாங்கும் செலவில் அரசு சார்பில் 50 சதவீத மானியமும், மூன்றாம் தொகுப்பு கோழிக்குஞ்சுகள் வாங்கும் செலவில் 30 சதவீதம் மானியம் வழங்கப்படும். தேர்வாகும் விவசாயிகளுக்கு தமிழ்நாடு கால்நடை மருத்துவம் மற்றும் அறிவியல் பல்கலை பயிற்சி மையங்களில் மூன்று நாட்களுக்கு முறையான பயிற்சி அளிக்கப்படும். தகுதியும், ஆர்வமும் உள்ளவர்கள் அந்தந்த கால்நடை உதவி டாக்டர்கள் மூலம் விண்ணப்பிக்கலாம் என்றார்.

**பவுடர் பாக்கெட் உயிர் உரங்களுக்கு பதிலாக திரவ உயி◌ா உரம், ரசாயன உர பயன்பாட்டை தவிர்க்க வாய்ப்பு**

வாலாஜாபாத்: பாலிதீன் பாக்கெட்டுகளில் வழங்கி வந்த, பவுடர் உயிர் உரங்களுக்கு பதிலாக, வேளாண் துறை நடப்பு ஆண்டில் இருந்து, திரவ வடிவில், உயிர் உரங்கள் (பயோ- பெர்டிலைசர்) விவசாயிகளுக்கு வழங்குவதற்கு, தீவிரம் காட்டி வருகிறது.

இந்த திரவ உயிர் உரங்களின் பயன்பாட்டினால், ரசாயன உரங்களின் பயன்பாடு குறையும் என, விவசாயிகளிடம் வேளாண் துறை அதிகாரிகள் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர். காஞ்சிபுரம் மாவட்டத்தில், கடந்த ஆண்டு, 1.48 லட்சம் ஏக்கரில் நெல்லும்; 25,490 ஏக்கரில் வேர்க்கடலை; 10,139 ஏக்கரில் பயறு வகை பயிர்கள், பயிரிடப்பட்டுள்ளதாக, வேளாண் துறை தெரிவித்துள்ளது.

மேலும், விவசாய நிலங்களின் உற்பத்தி திறனை மேம்படுத்த, வேளாண் துறை, பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது.

**மண் மாதிரி சேகரிப்பு**

முதல் கட்டமாக, விவசாயிகள் மண்ணின் தன்மை குறித்து அறிய, மாவட்டம் முழுவதும், மண் மாதிரிகளை, விவசாயிகளுடன் அந்தந்த வேளாண் உதவி அலுவலர்கள் சேகரித்து வருகின்றனர். மண் பரிசோதனை முடிவில், மண்ணின் தன்மை; சத்துக்கள் விவரம்; பயிரிடப்படும் பயிருக்கு தேவையான உர பரிந்துரைகள், வேளாண் துறையால் வழங்கப்பட உள்ளது.இதை தொடர்ந்து, உரச் செலவை குறைக்கவும், நஞ்சில்லா உணவு பொருட்களை உற்பத்தி செய்யவும்;

உயிர் உரங்களின் பயன்பாட்டை அதிகரிக்க, வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம், உயிர் உரங்களை அசோஸ்பயிரில்லம்; பாஸ்போ பாக்டீரியா; ரைசோபியம் ஆகிய பவுடர் உயிர் உரங்களுக்கு பதிலாக, நடப்பாண்டில் இருந்து, திரவ உயிர் உரங்களை வழங்கு

வதற்கு, வேளாண் துறை, தீவிரம் காட்டி வருகிறது.

**கூடுதல் மகசூல்**

இந்த திரவ உயிர் உரங்களை, விவசாயிகள் எளிதாக பயன்படுத்துவதற்கும், விதை நேர்த்தி மற்றும் நேரடியாக மண்புழு; தொழு உரத்துடன் கலந்து வயலில் இடுவதற்கும்; இலை வழி ஊட்டமாகவும் (தெளிப்பு முறை); நீர் வழியாகவும் (சொட்டு நீர் பாசனம்) பயன்படுத்தலாம்.மேலும், விவசாய கூலி ஆட்கள் மற்றும் யூரியா; டி.ஏ.பி., பொட்டாஷ் ஆகிய ரசாயன உரங்களின் பயன்பாட்டை கணிசமான அளவு குறைத்து, பூச்சி நோய் தாக்குதலை தவிர்ப்பதன் மூலம், 10 சதவீதத்தில் இருந்து, 25 சதவீதம் வரை, கூடுதல் மகசூல் கிடைக்கும் என, வேளாண் துறை அதிகாரிகள், விவசாயிகளிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர்.

இதுகுறித்து, வேளாண் துறை உயரதிகாரி ஒருவர் கூறியதாவது: நடப்பாண்டில் இருந்து, அந்தந்த வட்டார வேளாண் விரிவாக்க மையங்களில், தேவையான அளவிற்கு, திரவ உயிர் உரங்கள் இருப்பு வைக்கப்பட்டு உள்ளது. சம்பா பருவத்தில், விவசாயிகள் பயிரிடும் பயிர்களுக்கு ஏற்றவாறு, திரவ உயிர் உரங்களை வாங்கி பயன்பெறலாம். மேலும், பாக்கெட் உயிர் உரங்களின் வினியோக பயன்பாடும் அமலில் இருக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

## வேளாண் பட்டய படிப்புக்கு 1ம் தேதி முதல் விண்ணப்பம்

திண்டிவனம் : வேளாண் பட்டய படிப்புக்கான விண்ணப்பங்கள் ஜூலை மாதம் முதல் தேதி முதல் வழங்கப்படுகிறது.

திண்டிவனத்தில் உள்ள சி.சுப்ரமணியம் வேளாண்மைப் பட்டயப் படிப்பு நிலைய முதல்வர் முனைவர் வைத்தியநாதன் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு:

கோவை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும், திண்டிவனத்தில் உள்ள சி.சுப்ரமணியம் வேளாண்மைப் பட்டயப் படிப்பு நிலையத்தில் இரண்டு ஆண்டு பட்டயப் படிப்பிற்கான விண்ணப்பங்கள் வழங்கப்பட உள்ளது.திண்டிவனம் அடுத்த இறையானூர் எண்ணெய்வித்துக்கள் ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள, சி. சுப்ரமணியம் வேளாண்மை பட்டயப்படிப்பு மையத்தில் வரும் 1ம் தேதி முதல் விண்ணப்பம் வழங்கப்படும்.விண்ணப்பங்களை, காலை 10 மணி முதல் மாலை 4.00 மணி வரை நேரடியாக மட்டுமே பெற முடியும். இதில் சேர்வதற்கு பிளஸ்2 வகுப்பில் தாவரவியல் மற்றும் விலங்கியல் அல்லது உயிரியியல், வாழ்க்கைத் தொழில் வேளாண்மைக் கல்வி முடித்தவர்கள் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரர் ஜூலை 1ம் தேதி 21 வயதிற்குள் இருக்க வேண்டும். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு வயது வரம்பு கிடையாது.பொது, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு விண்ணப்ப கட்டணம் 200 ரூபாயும், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் 100 ரூபாய் மற்றும் சாதி சான்றிதழ் நகல் கொடுத்து விண்ணப்பத்தை பெற்று கொள்ளலாம்.பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், கோவை வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு ஜூலை 18ம் தேதி மாலை 5.00 மணிக்குள் சென்று சேர வேண்டும்.இவ்வாறு முனைவர் வைத்தியநாதன் தெரிவித்துள்ளார்.

**மழையால் நிரம்பிய அணைகள்**

ஊட்டி:'ஊட்டியில் பெய்த மழையில், நகரில் உள்ள அணைகள் வேகமாக நிரம்பி வருகின்றன; பிரதான அணையான, பார்சன்ஸ் வேலியில், ஐந்து நாட்களில், 13 அடி நீர் நிரம்பியது.

ஊட்டியில் கடந்த, 20ம் தேதி துவங்கி, பலத்த காற்றுடன் மழை பெய்து வருகிறது. இதனால், நகர மக்களின் தாகம் தணிக்கும், அணைகள் வேகமாக நிரம்பி வருகின்றன. நகரின் பிரதான நீர் தேக்க அணையான, பார்சன்ஸ்வேலி அணையின் நீர்மட்டம், 33 அடியாக உயர்ந்துள்ளது; கடந்தாண்டு, இதே கால கட்டத்தில், வெறும், 19.60 அடியாக மட்டுமே இருந்தது. பிற அணைகளிலும், கடந்தாண்டை ஒப்பிடுகையில், நீர் மட்டம் வெகுவாக உயர்ந்துள்ளது. இதனால், நகரில் நீர் வினியோகப் பிரச்னை இருக்காது என, எதிர்பார்க்கப்படுகிறது.

வனங்கள் சூழ்ந்த பார்சன்ஸ்வேலி அணைப்பகுதியில் பழமையான மரங்கள் அடர்ந்து வளர்ந்துள்ளன; சிறிய மழை, லேசான காற்று வீசினால் கூட மரக்கிளைகள் பெயர்ந்து, மின் கம்பிகளின் மீது விழுந்து, மின் இணைப்பு துண்டிக்கப்படும்; இதனால், நீர் வினியோகம் தடைபடும். கடந்த ஐந்து நாட்களாக, பலத்த காற்றுடன் மழை பெய்ததால், அப்பகுதியில் பல இடங்களில் மரங்கள், மரக்கிளைகள் விழுந்து, மின் இணைப்பு துண்டிக்கப்பட்டது. இதுவரை நீர் வினியோகத்தில் பெரியளவில் பிரச்னை ஏதும் இல்லை என்ற போதிலும், நேற்று துவங்கி நகரின் ஒரு சில இடங்களில் நீர் வினியோகத்தில் பிரச்னை ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து, நகராட்சி கமிஷனர் (கூடுதல் பொறுப்பு) ரூபன் சுரேஷ் கூறுகையில்,“பார்சன்ஸ்வேலி

அணைப்பகுதியில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டதால், ஜெனரேட்டர் உதவியுடன் நீர் வினியோகம் செய்து வருகிறோம்; சில இடங்களுக்கு லாரி மூலம் நீர் வினியோகம் செய்து வருகிறோம். கடந்த, ஐந்து நாட்களில் மட்டும், பார்சன்ஸ் வேலி அணையில், 13 அடி அளவுக்கு நீர் நிரம்பியது. இதுவரை, நீர் வினியோகத்தில் தடை எதுவும் இல்லை; சீரமைப்புப் பணிகள் முழு வீச்சில் நடந்து வருகின்றன," என்றார்.

தற்போது, மழை பெய்துள்ள நிலையில், சில இடங்களில் கலங்கலாக நீர் வினியோகம் செய்யப்படுகிறது என்ற புகார் எழுந்து வருகிறது. 'நீரை காய்ச்சி குடிக்க வேண்டும்' என, மாவட்ட சுகாதா ரப் பிரிவினர் அறிவுறுத்தியுள்ளனர்.

**பாரதிய கிஸான் சங்க கூட்டம் இலைக்கு விலை பெற ஆலோசனை**

கோத்தகிரி:கோத்தகிரியில் பாரதிய கிஸான் சங்க கூட்டம் நடந்தது.சங்க நிர்வாகி பாலாமணி தலைமை வகித்தார். நிர்வாகி ராமன், கீழ்கோத்தகிரி வட்டார விவசாயிகள் சங்க நிர்வாகிகள் மணி, மிலிட்டரி மணி மற்றும் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர், முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், 'நீலகிரி மாவட்டத்தில் பிரதான விவசாய பயிரான பசுந்தேயிலைக்கு ஏற்பட்டுள்ள விலை வீழ்ச்சி பிரச்னைக்கு தீர்வு காண, விவசாயிகளே ஒருங்கிணைந்து 'மைக்ரோ' தேயிலை தொழிற்சாலைகள் துவங்குவது; தொழிற்சாலைகள் துவங்கும் பட்சத்தில், சந்திக்கவேண்டிய இடையூறுகள் உள்ளிட்ட விவசாய சம்மந்தப்பட்ட பிரச்னைகள் குறித்து, விவாதம் நடத்துவது' என, முடிவு செய்யப்பட்டது.

சங்க மாநில அமைப்பாளர் கோபி, விவசாயிகளின் கேள்விகளுக்கு பதிலளித்து பேசுகையில், "நீலகிரி மாவட்ட விவசாயிகளின் பிரச்னைகள்

குறித்து, மாதந்தோறும் கூட்டம் நடத்தப்படும்; நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து குக்கிராமங்களிலும் கிஸான் சங்கத்தில் உறுப்பினர்களை சேர்த்து, சங்கத்தை வலுப்படுத்தவேண்டும்" என்றார்.

தொடர்ந்து, கோத்தகிரி பகுதி பாரதிய கிஸான் சங்கம் அமைப்பு ஏற்படுத்தப்பட்டு, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதில், கோத்தகிரி உட்பட மாவட்டத்தின் பிற பகுதிகளில் இருந்து விவசாயிகள் திரளாக பங்கேற்றனர். சங்க நிர்வாகி சுப்ரமணி வரவேற்றார். ரமேஷ் நன்றி கூறினார்.

## ஏலச்செடிகளுக்கு உரமாக செல்லும் பேரூராட்சி உரத்திற்கு வரவேற்பு

தேனி:ஏலச் செடிகளுக்கு இயற்கை உரமாக பயன்படும் பேரூராட்சி குப்பைக்கு வரவேற்பு ஏற்பட்டுள்ளது. திடக்கழிவு மேலாண்மை திட்டத்தை செயல்படுத்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக நிதிவழங்குகிறது. வீடுகளில் இருந்து வெளி வரும் மக்கும், மக்காத குப்பைகளை பிரித்து வாங்கி மறு"ழற்சி செய்து உரமாக்க வேண்டும் என்பது நோக்கமாகும். ஆனால் பல உள்ளாட்சிகள் இதனை நிறைவேற்றாமல் ஏதோ ஒரு காரணங்களை கூறி தட்டி கழிக்கின்றனர்.

போடி அருகே உள்ள பி.மீனாட்சிபுரம் பேரூராட்சியில் இயற்கை உரம் தயாரிக்கும் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்துகின்றனர்.

பேரூராட்சி துப்புரவு பணியாளர்கள் 8 பேர் வீடுகளில் குப்பைகளை தரம் பிரித்து வாங்குகின்றனர். மக்கும் குப்பைகளை தனியாக சேகரித்து ஊருக்கு வெளியே உள்ள "நிலவள மீட்பு பூங்கா' விற்கு கொண்டு வருகின்றனர்.

தினமும் 1300 கிலோ மக்கும் குப்பை தொட்டிகளில் பரப்பி, மண்புழு உதவியுடன் 90 நாட்களில் இயற்கை உரம் தயார் செய்கின்றனர்.

கடந்த எட்டு மாதங்களில் 30 டன் உரம் தயாரித்து, கிலோ ரூ.4 வீதம் விற்பனை செய்துள்ளனர். இது ஏல செடிகளுக்கு நல்ல இயற்கை உரம் என்பதால் விவசாயிகளிடம் வரவேற்பு ஏற்பட்டுள் ளது.

இதே போன்ற மற்ற உள்ளாட்சி அமைப்புகளும் இயற்கை உரம் தயார் செய்தால் குப்பைகள் தேக்கத்தை குறைக்கவும், வேளாண்மைக்கு பயனுள்ளதாக இருக்கும். இயற்கை உரம் தயாரிப்பினை கலெக்டர் வெங்கடாசலம் ஆய்வு செய்தார். உரம் தயாரிப்பிற்கு துணையாக இருந்த ஊராட்சி தலைவர் புஷ்பம், நிர்வாக அதிகாரி கார்த்திகேயன், துப்புரவு பணியாளர்களை பாராட்டினார்.

## ஒழுங்குமுறை விற்பனை கூடங்களை பயன்படுத்த விவசாயிகளுக்கு வேண்டுகோள்

தேனி:விவசாயிகள் ஒழுங்குமுறை விற்பனை கூடங்களை பயன்படுத்தி தங்களது விளை பொருட்களை விற்பனை செய்ய வேண்டும் என கலெக்டர் வெங்கடாச்சலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஒழுங்குமுறை விற்பனை கூடத்தினை விவசாயிகள் அதிகளவில் பயன்படுத்தும் வகையில், கலெக்டர் தலைமையில் விவசாயிகள் கலந்தாய்வு கூட்டம் நடந்தது. தேனி மாவட்ட விவசாயிகள் சங்க தலைவர் பாண்டியன், தமிழ்நாடு விவசாயிகள் சங்க தேனி மாவட்ட தலைவர் கண்ணன், மாவட்ட வியாபாரிகள் சங்க செயலாளர் நடேசன், நெல், அரிசி மொத்த வியாபாரிகள் சங்க தலைவர் ராம்சிங் மற்றும் வியாபாரிகள் பங்கேற்றனர். கலெக்டர் பேசியதாவது: தேனி, சின்னமனூர், கம்பம், போடி, பெரியகுளம், ஆண்டிபட்டி, உத்தமபாளையம் ஆகிய ஏழு இடங்களில் ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள் உள்ளன. இந்த விற்பனை கூடங்களில் 11 ஆயிரம் டன் கொள்ளவு கொண்ட கிட்டங்கிகளும், 600 டன் கொள்ளளவு கொண்ட

குளிர்சாதன கிட்டங்கிகளும் 5 டன் எடையுள்ள வாழை பழுக்க வைக்கும் கூடமும் உள்ளன. விளை பொருட்களை உலர வைப்பதற்கு களங்களும், விற்பனை செய்ய பரிவர்த்தனை கூடங்களும் உள்ளன.

விவசாயிகள் ஒழுங்குமுறை விற்பனை கூடங்களை பயன்படுத்தி தங்கள் பொருட்களை விற்பனை செய்யும் போது, சரியான எடை, அன்றாட சந்தை நிலவரம் அறியும் வாய்ப்பு, உயர்ந்தபட்ச விலை, தரகு மற்றும் மகிமை போன்ற பிடித்தங்கள் இன்றி உடனடி ரொக்கப்பணம், இலவச தரம் பிரிப்பு ஆகிய வசதிகளை பயன்படுத்திக் கொள்ளலாம்.

உரிய விலை கிடைக்கவில்லை என்றால் பொருட்களை இருப்பு வைக்கலாம். 5 சதவீத வட்டியில் 2 லட்சம் ரூபாய் வரை பொருளீட்டு கடன் பெறலாம். உழவர்நல நிதி திட்டத்தில் ஒரு லட்சம் ரூபாய் வரை இலவச காப்பீடு வசதி செய்து தரப்படுகிறது. வியாபாரிகளும் ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் உள்ள வசதிகளை முழுமையாக பயன்படுத்த முடியும். 9 சதவீதம் வட்டியில் ஒரு லட்சம் ரூபாய் வரை பொருளீட்டு கடன் பெறலாம், என்றார்.

**நஞ்சில்லா காய்கறி விளைச்சல் உழவர் சந்தைகளில் பயிற்சி**

தேனி:விவசாயிகள் நஞ்சில்லா காய்கறிகளை உற்பத்தி செய்வது குறித்து தேனி, பெரியகுளம் உழவர்சந்தைகள் மற்றும் தினசரி சந்தைகளில் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. தேனி தோட்டக்கலை உதவி இயக்குனர் ராஜன் பேசியதாவது: காய்கறி பயிர் சாகுபடியில் தாவர பூச்சி கொல்லிகளான வேம்பு சார்ந்த மருந்துகள், உயிரியல் மருந்துகள், மீன் எண்ணெய், ரோசின் சோப்பு வகைகள், பஞ்ச காவ்யா, மஞ்சள் ஒட்டும் பொறி வைத்தல், இனகவர்ச்சி பொறி வைத்தல், விளக்குப்பொறி வைத்தல், உயிரியியல் பூஞ்சான மருந்துகளான சூடோமோனாஸ், ப்ளூரசன்ஸ், டிரைகோடெர்மா விரிடி, மற்றும் வேம்பு மருந்துகள் பயன்படுத்த வேண்டும். இயற்கை உரங்களான மக்கிய தொழு உரம்,

மண்புழு உரங்கள், அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா பயன்படுத்த வேண்டும். காய்கறிகளை பறிப்பதற்கு ஒரு வாரம் முன்பே மருந்து தெளிப்பதை நிறுத்த வேண்டும். முற்றிலும் இயற்கை உரங்களை தயாரித்து சாகுபடி செய்தால், காய்கறிகளுக்கு விற்பனை வசதிகளும் அதிகரிக்கும். தரமான விலையும் பெற முடியும், என்றார்.

**கேரள சோதனைச் சாவடிகளில் உணவு பொருள் தர பரிசோதனைக்கூடம் வெளிமாநிலங்களில் இருந்து வரும் பொருட்களை ஆய்வு செய்ய நடவடிக்கை**



திருவனந்தபுரம்

உணவு பொருட்களின் தர பரிசோதனைக்காக நாட்டிலேயே முதல் முறையாக கேரள சோதனைச்சாவடிகளில் நடமாடும் ஆய்வுக்கூடங்கள் அமைக்கப்படுகின்றன.

தமிழகத்தில் இருந்து கொண்டு வரப்படும் காய்கறிகளில் அளவுக்கு அதிகமான பூச்சிக்கொல்லி நச்சு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு உள்ளதாக, தமிழக அரசிடம் சமீபத்தில் கேரளா தெரிவித்து உள்ளது.

<u>முதற்கட்டமாக 3 ஆய்வுக்கூடங்கள்</u>

இந்த நிலையில் தங்கள் மாநிலத்துக்கு வரும் பால், எண்ணெய், குடிநீர் மற்றும் பால் பொருட்கள் உள்ளிட்ட சமையல் பொருட்களை பரிசோதனை செய்வதற்காக நடமாடும் ஆய்வுக்கூடங்களை கேரள அரசு அமைக்கிறது.

இந்த நடமாடும் ஆய்வுக்கூடங்கள் மாநிலத்தின் குறிப்பிட்ட சில சோதனைச்சாவடிகளில் அமைக்கப்படுகின்றன. எனினும் இதற்கான இடங்கள் இன்னும் இறுதி செய்யப்படவில்லை. இந்த திட்டத்தில் முதல் கட்டமாக 3 நடமாடும் ஆய்வுக்கூடங்கள் அமைக்கப்படுகின்றன.

<u>டெண்டர் நடவடிக்கைகள்</u>

இந்த ஆய்வுக்கூடங்களை அமைக்கும் நிறுவனத்தை தேர்வு செய்யும் பொறுப்பு கேரள மாநில மருத்துவப்பணிகள் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது.

இந்த நடமாடும் ஆய்வுக்கூடங்களில் பரிசோதனை செய்யும் உணவு மாதிரிகளில் அதிகப்படியான மாசுக்கள் கலந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டால், அடுத்தகட்ட பரிசோதனைக்காக பின்னர் அவை, அருகில் உள்ள உணவு பாதுகாப்பு ஆய்வுக்கூடங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். <u>பிற மாநிலங்களுக்கு முன்மாதிரி</u>

எனினும் பால், எண்ணெய், பால் பொருட்கள் மற்றும் குடிநீர் போன்ற சமையல் பொருட்கள் மட்டுமே இந்த நடமாடும் ஆய்வுக்கூடங்களில் பரிசோதிக்கப்படும். காய்கறிகள் போன்ற பொருட்கள் இந்த ஆய்வுக்கூடங்களில் பரிசோதிக்க முடியாது என்று கேரள மாநில உணவு பாதுகாப்பு இணை கமிஷனர் அனில் குமார் தெரிவித்தார்.

நாட்டிலேயே முதல் முறையாக கேரளாவில் இந்த நடமாடும் உணவு ஆய்வுக்கூடங்கள் அமைக்கப்படுவதாக கூறிய அவர், அந்த வகையில் உணவு பாதுகாப்பு விஷயத்தில் பிற மாநிலங்களுக்கு ஒரு முன்மாதிரியாக கேரளா திகழ்வதாகவும் தெரிவித்தார்.

**வரத்து குறைவால் சாம்பார் வெங்காயம் விலை உயர்வு ஒரு கிலோ ரூ.60–க்கு விற்பனை**



சென்னை,

பீன்ஸ், அவரைக்காய், முருங்கைக்காய், தேங்காய் விலை குறைந்துள்ளது. வரத்து குறைவு காரணமாக சாம்பார் வெங்காயம் விலை உயர்ந்து ஒரு கிலோ ரூ.60–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

காய்கறிகள்

சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் கடந்த சில நாட்களாகவே காய்கறிகள் விலை உயர்ந்தும், குறைந்தும் காணப்பட்டு வருகிறது. பீன்ஸ், அவரைக்காய், முருங்கைக்காய் போன்ற காய்கறிகளின் விலை கடந்த வாரத்தில் ஒரு கிலோ ரூ.50–க்கு மேல் விற்பனை செய்யப்பட்டு வந்தது.

ஆனால் நேற்று பீன்ஸ், அவரைக்காய், முருங்கைக்காய் ஆகியவற்றின் விலை கிலோவுக்கு ரூ.10 முதல் ரூ.20 வரை குறைந்துள்ளது. அதேபோல், கடந்த வாரத்தில் விலை உயர்ந்து காணப்பட்ட சேனைக்கிழங்கு, சேப்பக்கிழங்கு, கத்திரிக்காய், வெண்டைக்காய், ஆகியவற்றின் விலையும் குறைந்துள்ளது. ஒரு புறம் சில காய்கறிகள் விலை குறைந்திருந்தாலும், சாம்பார் வெங்காயம், காலிபிளவர், பச்சைப்பட்டாணி ஆகியவற்றின் விலை உயர்ந்துள்ளது. இதுதொடர்பாக சென்னை கோயம்பேடு மார்க்கெட் வியாபாரிகள் சங்க ஆலோசகர் சவுந்திரராஜன் கூறியதாவது:– சாம்பார் வெங்காயம்

சாம்பார் வெங்காயம் திண்டுக்கல், தாராபுரம், திருச்சி ஆகிய பகுதிகளில் இருந்து விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. நாளொன்றுக்கு 10 முதல் 15 லாரிகளில் வந்து கொண்டு இருந்த சாம்பார் வெங்காயம் தற்போது 8 லாரிகளில் தான் வருகிறது.

இதன் காரணமாக, கடந்த வாரத்தில் ரூ.40–க்கு விற்பனை செய்யப்பட்டு வந்த சாம்பார் வெங்காயம், நேற்று கிலோவுக்கு ரூ.20 அதிகரித்து, ஒரு கிலோ ரூ.60–க்கு விற்பனை செய்யப்படுகிறது. அதேபோல், வரத்து குறைவால் காலிபிளவர், பச்சைப்பட்டாணி விலையும் உயர்ந்துள்ளது. கடந்த வாரத்தில் விலை உயர்ந்து காணப்பட்ட பீன்ஸ், அவரைக்காய், முருங்கைக்காய், தேங்காய் வரத்து அதிகரிப்பால், அதன் விலை சற்று குறைந்துள்ளது. விலை நிலவரம் சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் நேற்று விற்பனை செய்யப்பட்ட காய்கறிகளின் விலை நிலவரம் (ஒரு கிலோ) வருமாறு:– உருளைக்கிழங்கு – ரூ.18, பல்லாரி – ரூ.25 முதல் ரூ.28 வரை, பீன்ஸ் – ரூ.40, கேரட் – ரூ.35, நூக்கல் – ரூ.25, சவ்சவ் – ரூ.20, காலிபிளவர் – ரூ.40, பீட்ரூட் – ரூ.25, முட்டைக்கோஸ் – ரூ.10 முதல் ரூ.12 வரை, மிளகாய் – ரூ.25, இஞ்சி புதியது – ரூ.45, இஞ்சி பழையது – ரூ.90, சேனைக்கிழங்கு – ரூ.25, சேப்பக்கிழங்கு – ரூ.30, கத்திரிக்காய் – ரூ.15 முதல் ரூ.20 வரை, வெண்டைக்காய் – ரூ.25,

அவரைக்காய் – ரூ.45 முதல் ரூ.50 வரை, கோவைக்காய் – ரூ.22, கொத்தவரங்காய் – ரூ.25, பாகற்காய் – ரூ.30, முருங்கைக்காய் – ரூ.50, முள்ளங்கி – ரூ.15, தக்காளி – ரூ.20 முதல் ரூ.25 வரை, சாம்பார் வெங்காயம் – ரூ.60, பச்சைப்பட்டாணி – ரூ.180, பீர்க்கங்காய் – ரூ.25, சுரைக்காய் – ரூ.20, புடலங்காய் – ரூ.20, தேங்காய் – ரூ.18, வாழைக்காய் (காய் ஒன்று) – ரூ.5. இவ்வாறு அவர் கூறினார். புகார் கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறிகள் விலை குறைந்து காணப்பட்டாலும், சென்னையை சுற்றியுள்ள சில்லரை கடைகளில் காய்கறிகள் விலை அதிகம் உயர்ந்து இருப்பதாக பொதுமக்கள் புகார் தெரிவிக்கின்றனர். இதுகுறித்து சென்னை புரசைவாக்கத்தை சேர்ந்த சுப்பிரமணியன் கூறியதாவது:–

பீன்ஸ், அவரைக்காய், முருங்கைக்காய் விலை குறைந்துள்ளது என்றாலும், கடந்த வாரத்தில் என்ன விலைக்கு விற்பனைக்கு செய்தார்களோ அதே விலையில் தான் விற்பனை செய்கிறார்கள். மேலும் சாம்பார் வெங்காயம் கோயம்பேடு மார்க்கெட்டில் ஒரு கிலோ ரூ.60–க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆனால் அதே வெங்காயம் புரசைவாக்கம், கொசப்பேட்டை மார்க்கெட்டில் ரூ.80 முதல் ரூ.100 வரை விற்பனை செய்யப்படுகிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**பயிர்க்கடனுக்கு தொடர்ந்து வட்டி மானியம் வழங்க வேண்டும் விவசாயிகள் சங்க மாநில செயற்குழு கூட்டத்தில் தீர்மானம்**




பெரம்பலூர்,

பயிர்கடனுக்கு தொடர்ந்து வட்டி மானியம் வழங்க வேண்டும் என்று தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட செயற்குழுவில் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது. விவசாயிகள் சங்க செயற்குழு கூட்டம்

பெரம்பலூரில் தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட செயற்குழு கூட்டம் மாநில செயலாளர் ராஜா சிதம்பரம் தலைமையில் புறநகர் பஸ்நிலைய பகுதியில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெற்றது. கூட்டத்தில் 33 சதவீதம் பயிர் மகசூல் பாதிக்கப்பட்டாலும், வறட்சி பாதிப்பிற்கும் உரிய சலுகை வழங்கிட மத்திய அரசின் அறிவிப்பை அரசாணையாக வெளியிட்டு அதனை செயல்படுத்திட மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தேசிய வேளாண்மை பயிர் காப்பீடு திட்டத்தில் கடைபிடித்து வரும் கொள்கையில் மாறுதல் செய்து, அதே பிரிமியத்தில் ஒரு கிராமத்தில் பயிர் பாதிக்கப்பட்டாலும் காப்பீட்டுத்தொகை கிடைக்கும் வகையில்

திட்டத்தில் மாறுதல் செய்திட மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.மானியம் வழங்க வேண்டும்

தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் விவசாய பயிர்க்கடன், நகைக்கடனுக்கு மத்திய அரசு வழங்கி வந்த வட்டி மானிய கொள்கையில் மாறுதல் செய்யாமல் பயிர்க்கடனுக்கு வட்டி மானியம் தொடர்ந்து வழங்கிட வேண்டும். விவசாயிகள் நிலத்தை கையகப்படுத்திட பிறப்பித்த அவசர சட்டத்தை மத்திய அரசே திரும்ப பெற வேண்டும். கிராம பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் மூலம் கொள்முதல் செய்யும் பால் முழுவதையும் மறுப்பு சொல்லாமல் ஆவின் நிர்வாகம் எடுத்துக்கொள்ள தமிழக அரசு நடவடிக்கை எடுக்கவும் மற்றும் கோரிக்கைகளை வலியுறுத்தி ஜூலை 5–ந்தேதி கிருஷ்ணகிரியில் நடைபெற உள்ள உழவர் தின பொதுக்கூட்டத்தில் பெரம்பலூர் மாவட்டத்தில் இருந்து திரளான விவசாயிகள் கலந்துகொள்வது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் மாவட்டத்தலைவர் மாணிக்கம், செயலாளர் நீலகண்டன் மாவட்ட பொருளாளர் மணி இளைஞர் அணி செயலாளர் பெரியசாமி மற்றும் வட்டார பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

**சேலம் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் ரூ.25 லட்சத்துக்கு மஞ்சள் விற்பனை**



சேலம் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் ரூ.25 லட்சத்துக்கு மஞ்சள் விற்பனை ஆனது. மஞ்சள் ஏலம் சேலம் பள்ளப்பட்டி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் பருத்தி, நிலக்கடலை, மஞ்சள் போன்றவற்றை விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்து நேரடியாக ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. இதனால், விவசாயிகளின் உற்பத்தி பொருளுக்கு உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது.அதன்படி, சேலம் பள்ளப்பட்டி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்திற்கு பொம்மிடி, வாழப்பாடி, அயோத்தியாப்பட்டணம், ஏன்.என்.மங்கலம், ஓமலூர், மேச்சேரி, பனமரத்துப்பட்டி, பாப்பாரப்பட்டி, பாறப்பட்டி, வீரபாண்டி ஆகிய பகுதிகளில் இருந்து விவசாயிகள் 500 மூட்டை மஞ்சளை விற்பனைக்கான கொண்டு வந்தனர்.

**ரூ.25 லட்சத்துக்கு ஏலம்**

அங்கு விரலி மஞ்சள் குவிண்டால்(100கிலோ) ஒன்றுக்கு குறைந்த பட்ச விலை ரூ.6,509 என்றும், அதிக பட்சவிலை ரூ.7,889 எனவும், குண்டுமஞ்சள் குவிண்டாலுக்கு குறைந்த பட்ச விலை ரூ.6,069 என்றும், அதிகபட்ச விலை ரூ.7,100 என்றும், பனங்காலி மஞ்சள் குவிண்டாலுக்கு குறைந்த பட்சவிலை ரூ.8,509 என்றும், அதிக பட்சவிலை ரூ.12,699 என்றும் நிர்ணயிக்கப்பட்டது.

மஞ்சள் மூட்டையை சேலம், ஈரோடு, நாமகிரிப்பேட்டை, ஆத்தூர், அரூர் ஆகிய இடங்களில் இருந்து வந்திருந்த வியாபாரிகள் போட்டி போட்டு ஏலம் எடுத்தனர். 500 மூட்டை மஞ்சளும் மொத்தம் ரூ.25 லட்சத்திற்கு

விற்பனை செய்யப்பட்டது. விவசாயிகளுக்கும் பணம் உடனடியாக பட்டுவாடா செய்யப்பட்டது.

**குறுவை தொகுப்பு திட்ட பணிகள் அதிகாரி ஆய்வு**



திருவாரூரை அடுத்த திருக்காரவாசல் கிராமத்தில் குறுவை தொகுப்பு திட்டத்தின் கீழ் நடைபெறும் பசுந்தாள் உரப்பயிர் விதை தெளிப்பு பணியை மாநில வேளாண்மை திட்டங்களின் மாவட்ட துணை இயக்குனர் மதியழகன் ஆய்வு செய்தபோது எடுத்தபடம்.

திருவாரூர் வட்டாரத்தில் நடைபெறும் குறுவை தொகுப்பு திட்ட பணிகளை மாநில வேளாண்மை திட்டங் களின் துணை இயக்குனர் மதியழகன் ஆய்வு செய்தார். ரூ.14 கோடி ஒதுக்கீடு

தமிழக அரசு குறுவை சாகுபடியை ஊக்கு விப்பதற் காகவும், மண்வளத்தை மேம் படுத்துவதற்காகவும் குறுவை சிறப்பு தொகுப்பு உதவி திட்டத்தை செயல்படுத்தி உள்ளது. இந்த திட்டத்தின் கீழ் திருவாரூர்¢ மாவட்டத்துக்கு ரூ.14 கோடியே 41 லட்சத்து 80 ஆயிரம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது. திட்டத்தின்படி திருவாரூர் வட்டாரத்தி¢ல் விலையில்லா உழவு பணிகள், பசுந்தாள் உர பயிர் சாகுபடி பணிகள் உள் பட பல்வேறு பணிகள் விறு விறுப்பாக நடைபெற்று வரு கின்றன. திருவாரூரை அடுத்த திருக்காரவாசல் கிராமத்தில் பசுந்தாள் உரப்பயிர் விதைகளை தெளிக்கும் பணியின்

தொடக்க நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் மாநில வேளாண்மை திட்டங்களின் மாவட்ட துணை இயக்குனர் மதியழகன், விதை தெளிப்பு பணிகளை தொடங்கி வைத்து பார்வையிட்டார். இதேபோல் திருவாரூர் வட்டாரம் முழுவதும் நடைபெறும் குறுவை தொகுப்பு திட்ட பணிகளை அவர் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வு குறித்து அவர் நிருபர் களிடம் கூறியதா வது:- பயன்படுத்தி கொள்ள வேண்டும் குறுவை சாகுபடியை முழுமையாக மேற்கொள்ள குறுவை தொகுப்பு உதவி திட்டம் செயல்படுத்தப்பட்டு உள்ளது. இந்த திட்டத்தின் கீழ் விலையில்லா உழவு பணிகள் தற்போது மாவட்டம் முழுவதும் நடைபெற்று வருகின்றன. மண் வளத்தை மேம்படுத்துவதற்காக பசுந்தாள் உர சாகுபடி செய்யப்படுகிறது. இதற்காக விவசாயிகளுக்கு பசுந்தாள் விதைகள் வழங்கப்பட்டு உள்ளன. இத்திட்டத்தை விவசாயிகள் நல்ல முறையில் பயன்படுத்தி, குறுவை சாகுபடியை சிறப்பாக செய்ய வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். ஆய்வின்போது திருக்கார வாசல் ஊராட்சி தலைவர் சமுத்திரம், வேளாண்மை உதவி இயக்குனர் இளங் கோவன், வேளாண்மை அதி காரி செந்தில், வேளாண்மை உதவி அலுவலர் சேகர், வட் டார வேளாண்மை தொழில் நுட்ப வல்லுனர் வைரமுத்து, உதவி தொழில் நுட்ப வல்லு னர் ஜெயகுமார் ஆகியோர் உடன் இருந்தனர்.

தினகரன்

**சிறுகமணியில் பண்ணை இயந்திரமயமாக்கல் பயிற்சி**

ஜீயபுரம், : பண்ணை இயந்திரமயமாக்கள் குறித்த சிறப்பு பயிற்சி சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடைபெற்றது. வேளாண்மைக்கு உகந்த பண்ணை கருவிகளான லேசர் சமப்படுத்துவான் பற்றிய பயிற்சியை வேளாண் விரிவாக்க கல்வி இயக்குனர் பிலிப் துவக்கி வைத்தார். அப்போது அவர் பேசுகையில், வேளாண்மையில் தற்போது

பெருகிவரும் ஆட்கள் பற்றாக்குறை காரணமாக பண்ணை இயந்திரங்களின் பயன்பாடு மிகவும் அவசியமாகிறது. தற்போது விவசாயத்தில் பண்ணை கருவிகளின் பங்கு மிகமுக்கியமான ஒன்றாகும். பயிற்சியில் கலந்துகொள்வதன் மூலம் விவசாயிகள் பண்ணை கருவிகளை எளிதாக கையாள முடியும் என்றார்.

கரும்பு ஆராய்ச்சி மற்றும் அறிவியல் நிலைய தலைவர் சந்திரசேகரன் பண்ணை கருவிகளின் பயன்பாடு குறித்தும், வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் விஜயலெட்சுமி கருவிகளின் முக்கியத்துவம் குறித்தும் விளக்கினர். நெல் சாகுபடிக்கு ஏற்ற பண்ணை கருவிகளான லேசர் முறையில் வயலை சமப்படுத்தும் கருவி, சட்டிக்கலப்பை, சுழற்கலப்பை, சேற்று வயலில் நேரடியாக நெல் விதைக்கும் கருவி, நெல் நாற்று நடவு செய்யும் இயந்திரம், டிராக்டர் கொத்து கலப்பையுடன் இணைந்த விதை விதைக்கும் கருவி, திருந்திய முறையில் சாகுபடி செய்யப்பட்ட நெற்பயிரில் களை எடுக்கும் கருவி, பயிர் பாதுகாப்பில் உபயோகப்படுத்தும் தெளிப்பான்கள் மற்றும் பண்ணை இயந்திரமயமாக்குதல் தொழில் நுட்பங்கள் குறித்து பேராசிரியர்கள் விளக்கப்பயிற்சி அளித்தனர். திருச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து 25க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துகொண்டனர்.

திருவாரூர் மாவட்டத்தில் குறுவை தொகுப்பு உதவி திட்டம் செயல்படுத்த ரூ14.41 கோடி ஒதுக்கீடு விவரம் தெரிந்து கொள்ள கட்டுப்பாட்டு அறை திறப்பு திருவாரூர், : திருவாரூர் மாவட்டத்தில் குறுவை சாகுபடி தொகுப்பு உதவித்திட்டம் குறித்த விபரங்களை வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் இயங்கி வரும் கட்டுப்பாட்டு அறையை தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. டெல்டா மாவட்டங்களில் குறுவை நெல் சாகுபடியை ஊக்குவிக்கவும், மண்வளத்தை பெருக்கிடவும் ரூ.40 கோடியே 97 லட்சத்து 50 ஆயிரம்

நிதி ஒதுக்கீட்டில் குறுவை தொகுப்பு உதவி திட்டத்தை தமிழக அரசு அறிவித்துள்ளது. அதன்படி திருவாரூர் மாவட்டத்திற்கு ரூ14 கோடியே 41 லட்சத்து 80 ஆயிரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் குறுவை நெல் நடவு பணிகளையும், களைக் கட்டுப்பாட்டுப் பணிகளையும் உரிய காலத்தில் மேற்கொள்ளவும், பயிர் எண்ணிக்கையை பராமரித்து குறைந்த நீரில் அதிக பரப்பளவில் திருந்திய நெல் சாகுபடி முறையினை பின்பற்றி மகசூலை உயர்த்தும் வகையில் நடவு இயந்திரங்களை பயன்படுத்தி நடவு பணிகள் மேற்கொள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் வேளாண் பொறியியல் துறை மூலம் நடவு இயந்திரங்கள் வாடகைக்கு பெறப்பட்டு தேவையின் அடிப்படையில் விவசாயிகளின் வயல்களில் எவ்வித கட்டணமும் இன்றி நடவுப் பணி மேற்கொள்ளப்பட உள்ளது. இதற்காக இம்மாவட்டத்திற்கு 33 ஆயிரம் 380 ஏக்கர் பரப்பிற்கு ரூ.8 கோடியே34 லட்சத்து 50 ஆயிரம் நிதி ஒதுக்கீடும், குறுவை சாகுபடியின் மகசூலை உயர்த்தும் வகையில் நெல் நுண்ணூட்டக் கலவை மற்றும் உயிர் உரங்கள் ஆகியவற்றை விவசாயிகள் பயன்படுத்த ஊக்குவிக்கும் வகையில் ஏக்கர் ஒன்றுக்கு ரூ315 வீதம் 65 ஆயிரத்து 500 ஏக்கர் பரப்பிற்கு ரூ.2 கோடியே 63 ஆயிரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

மண்பரிசோதனை ஆய்வின் அடிப்படையில் மண்வளத்தை மேம்படுத்திட விலை ஏதுமின்றி 21 ஆயிரத்து 500 ஏக்கர் பரப்பிற்கு ஜிப்சம் ரூ.1கோடியே 29 லட்சம் மதிப்பில் வழங்கிடவும்,மேலும் வெண்ணாறு பகுதியில் நிலத்தடி நீர் பாதிப்பால் குறுவை நெல் சாகுபடி மேற்கொள்ள இயலாத சூழ்நிலை உள்ளதால் விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்கு உதவிடும் வகையில் ஒரு புதிய திட்டமாக மண்ணின் ஈரப்பதத்தைக் கொண்டு உழவு மேற்கொண்டு குறுகிய கால பயிர்களான பயறு வகைகள் அல்லது பசுந்தாள் உரப்பயிர்களை தொகுப்பு கிராம அணுகுமுறையில் விவசாயிகள் சாகுபடி செய்ய ஏதுவாக இப்பகுதிகளில் வேளாண் பொறியியல் துறை மூலமாக உழவுப் பணி மேற்கொள்ளப்படுவதோடு, குறுகிய கால பயறு அல்லது பசுந்தாளுர

பயிர்களை சாகுபடி செய்ய தேவையான விதைகள் 16 ஆயிரம் ஏக்கர் பரப்பிற்கு வழங்கிட ரூ.2 கோடியே 72 லட்சம் ஒதுக்கீடும் என மொத்தம் ரூ.14 கோடியே 41லட்சத்து 80 ஆயிரம் திருவாரூர் மாவட்டத்திற்கு தமிழக அரசு மூலம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. எனவே இந்த குறுவை தொகுப்பு உதவித் திட்ட பணிகளை செவ்வனே நிறைவேற்றிட ஏதுவாக திட்ட செயலாக்க கட்டுப்பாட்டு அறை ஒன்று கலெக்டர் அலுவலக வளாகத்தில் இயங்கி வரும் வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் துவங்கப்பட்டுள்ளது. எனவே இது குறித்து விபரங்களை அறிய விரும்பும் விவசாயிகள் கட்டுப்பாட்டு அறையை தொடர்பு கொண்டு அறியலாம்.இதற்கு கட்டுப்பாட்டு அறை தொலைபேசி எண்: 04366 224956 அல்லது அலைபேசி எண்: 9750963315 ஆகியவற்றில் தொடர்பு கொள்ளலாம். திருவாரூர், : திருவாரூர் மாவட்டத்தில் குறுவை சாகுபடி தொகுப்பு உதவித்திட்டம் குறித்த விபரங்களை வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் இயங்கி வரும் கட்டுப்பாட்டு அறையை தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

டெல்டா மாவட்டங்களில் குறுவை நெல் சாகுபடியை ஊக்குவிக்கவும், மண்வளத்தை பெருக்கிடவும் ரூ.40 கோடியே 97 லட்சத்து 50 ஆயிரம் நிதி ஒதுக்கீட்டில் குறுவை தொகுப்பு உதவி திட்டத்தை தமிழக அரசு அறிவித்துள்ளது. அதன்படி திருவாரூர் மாவட்டத்திற்கு ரூ14 கோடியே 41 லட்சத்து 80 ஆயிரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் குறுவை நெல் நடவு பணிகளையும், களைக் கட்டுப்பாட்டுப் பணிகளையும் உரிய காலத்தில் மேற்கொள்ளவும், பயிர் எண்ணிக்கையை பராமரித்து குறைந்த நீரில் அதிக பரப்பளவில் திருந்திய நெல் சாகுபடி முறையினை பின்பற்றி மகசூலை உயர்த்தும் வகையில் நடவு இயந்திரங்களை பயன்படுத்தி நடவு பணிகள் மேற்கொள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் வேளாண் பொறியியல் துறை மூலம் நடவு இயந்திரங்கள் வாடகைக்கு பெறப்பட்டு தேவையின்

அடிப்படையில் விவசாயிகளின் வயல்களில் எவ்வித கட்டணமும் இன்றி நடவுப் பணி மேற்கொள்ளப்பட உள்ளது. இதற்காக இம்மாவட்டத்திற்கு 33 ஆயிரம் 380 ஏக்கர் பரப்பிற்கு ரூ.8 கோடியே34 லட்சத்து 50 ஆயிரம் நிதி ஒதுக்கீடும், குறுவை சாகுபடியின் மகசூலை உயர்த்தும் வகையில் நெல் நுண்ணூட்டக் கலவை மற்றும் உயிர் உரங்கள் ஆகியவற்றை விவசாயிகள் பயன்படுத்த ஊக்குவிக்கும் வகையில் ஏக்கர் ஒன்றுக்கு ரூ315 வீதம் 65 ஆயிரத்து 500 ஏக்கர் பரப்பிற்கு ரூ.2 கோடியே 63 ஆயிரம் ஒதுக்கப்பட்டுள்ளது. மண்பரிசோதனை ஆய்வின் அடிப்படையில் மண்வளத்தை மேம்படுத்திட விலை ஏதுமின்றி 21 ஆயிரத்து 500 ஏக்கர் பரப்பிற்கு ஜிப்சம் ரூ.1கோடியே 29 லட்சம் மதிப்பில் வழங்கிடவும்,மேலும் வெண்ணாறு பகுதியில் நிலத்தடி நீர் பாதிப்பால் குறுவை நெல் சாகுபடி மேற்கொள்ள இயலாத சூழ்நிலை உள்ளதால் விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்கு உதவிடும் வகையில் ஒரு புதிய திட்டமாக மண்ணின் ஈரப்பதத்தைக் கொண்டு உழவு மேற்கொண்டு குறுகிய கால பயிர்களான பயறு வகைகள் அல்லது பசுந்தாள் உரப்பயிர்களை தொகுப்பு கிராம அணுகுமுறையில் விவசாயிகள் சாகுபடி செய்ய ஏதுவாக இப்பகுதிகளில் வேளாண் பொறியியல் துறை மூலமாக உழவுப் பணி மேற்கொள்ளப்படுவதோடு, குறுகிய கால பயறு அல்லது பசுந்தாளூர பயிர்களை சாகுபடி செய்ய தேவையான விதைகள் 16 ஆயிரம் ஏக்கர் பரப்பிற்கு வழங்கிட ரூ.2 கோடியே 72 லட்சம் ஒதுக்கீடும் என மொத்தம் ரூ.14 கோடியே 41லட்சத்து 80 ஆயிரம் திருவாரூர் மாவட்டத்திற்கு தமிழக அரசு மூலம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. எனவே இந்த குறுவை தொகுப்பு உதவித் திட்ட பணிகளை செவ்வனே நிறைவேற்றிட ஏதுவாக திட்ட செயலாக்க கட்டுப்பாட்டு அறை ஒன்று கலெக்டர் அலுவலக வளாகத்தில் இயங்கி வரும் வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகத்தில் துவங்கப்பட்டுள்ளது. எனவே இது குறித்து விபரங்களை அறிய விரும்பும் விவசாயிகள் கட்டுப்பாட்டு அறையை தொடர்பு கொண்டு அறியலாம்.இதற்கு கட்டுப்பாட்டு அறை

தொலைபேசி எண்: 04366 224956 அல்லது அலைபேசி எண்: 9750963315 ஆகியவற்றில் தொடர்பு கொள்ளலாம்.

கால்நடைகளை பாதுகாக்க மருந்தகம் அமைக்க கோரிக்கை

செம்பட்டி, :திண்டுக்கல் மாவட்டம் அலவாச்சிபட்டி, சாமியார்பட்டி, அனுப்பபட்டி கிராமங்களில் உள்ள கால்நடைகளை பாதுகாக்க கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளளது.திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம் பகுதியில் கால்நடை ஆய்வாளர்களே கால்நடைக்கு சிகிச்சை அளிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. டாக்டர்கள் சரிவர மருத்துவமனைகளுக்கு வராததால் ஆய்வாளர்கள் மற்றும் அலுவலக பணியாளர்களே கால்நடைக்கு சிகிக்சை அளிக்கின்றனர்.கோனூர் பகுதியில் செயல்படும் கால்நடை மருந்தகம் பெரும்பாலும் பூட்டி கிடப்பதாக கிராமமக்கள் புகார் தெரிவித்துள்ளனர். அனுப்பப்பட்டி, சாமியார்பட்டி, அலவாச்சிபட்டி, உட்பட மூன்று கிராமங்களில் சுமார் 600க்கும் மேற்பட்ட கால்நடைகள் உள்ளன. கால்நடைகள் நோய்வாய்பட்டால் கோனூர் சென்றே சிகிச்சை அளிக்க வேண்டிய நிலை உள்ளது. காலதாமதம் பலநேரங்களில் கால்நடைகளின் உயிருக்கு ஆபத்து ஏற்படுகிறது.

இதைத் தவிர்க்க அலவாச்சிபட்டி, அனுப்பப்பட்டி, சாமியார்பட்டி ஆகிய மூன்று கிராமங்களில் ஏதாவது ஒரு கிராமத்தில் கால்நடை கிளை மருந்தகம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கால்நடை வளர்ப்போர் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர். மேலும் இப்பகுதியில் நூற்றுக்கணக்கான கால்நடைகள் பலவித நோய்களால் இறந்து போவதால் கால்நடை மருத்துவர்கள் தவறாமல் கால்நடை மருந்தகங்களுக்கு வருவதற்கு கலெக்டர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் ேகாரிக்கை விடுத்துள்ளனர்.

**பயிர்களுக்கு ரசாயன உரம் வேண்டாம் தோட்டக்கலை இயக்குநர் வலியுறுத்தல்**

சிவகங்கை, : சிவகங்கை மாவட்ட தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் கல்யாணசுந்தரம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு: மாவட்டத்தில் காய்கறி மற்றும் பழப்பயிர்கள் அதிக அளவில் பயிரிடப்படுகின்றன. இவைகளில் ஏற்படும் நோய் மற்றும் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த ரசாயன உரம், மருந்துகளை தவிர்த்து இயற்கை வழி உரம், பயிர் பாதுகாப்பு மருந்துகளை பயன்படுத்த வேண்டும். நன்றாக மக்கிய தொழு உரம், மண்புழு உரம் ஆகியவை மண்ணின் பௌதீக குணத்தை மேம்படுத்தி உற்பத்தி தன்மையை அதிகரித்து கொடுக்கும். அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா போன்ற உயிர் உரங்கள் பயிருக்கு தேவையான ஊட்டச்சத்துக்களை இயற்கை முறையிலேயே அளிக்கும்.

மேலும் ஊட்டமேற்றிய தொழு உரம், குறைந்த அளவு ரசாயன உரம், இயற்கை உரம் கலந்த கலவையாக பயன்படுத்தலாம். காய்கறி விதைகள் விதைப்பதற்கு முன் டிரைகோடெர்மா விரிடி போன்ற உயிர் பாதுகாப்பு மருந்துகளை கலந்து விதை நேர்த்தி செய்வதால் நாற்றங்கால் நிலையில் ஏற்படும் நோய் தாக்குதலை தடுக்கலாம். பஞ்சகாவ்யா போன்ற திரவநிலை உரங்களை தெளிப்பதால் பயிர்களின் வளர்ச்சி மற்றும் பூ பூக்கும் தன்மை அதிகரிக்கும். வேப்பம் புண்ணாக்கு கரைசல், வேப்ப எண்ணெய், வேப்பங்கொட்டை சாறு போன்ற வேம்பு சார்ந்த பயிர் பாதுகாப்பு மருந்துகளை பயன்படுத்தலாம். இயற்கை வழி உரம் மற்றும் பயிர்பாதுகாப்பு முறைகளை பயன்படுத்த வேண்டும். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

**மகளிர் குழுக்களுக்கு வேளாண் திட்ட பயிற்சி**

கரூர், : கரூர் அரெட்ஸ் மையத்தில் வேளாண் மற்றும் அரசு நலத்திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வு பயிற்சி நடைபெற்றது. இதில்

மகளிர் குழுக்களை சேர்ந்த 65 மகளிர் கலந்துகொண்டனர். இதில் ஊரக தொழில்முனைவோர் பயிற்சி இயக்குனர் தமயந்தி கலந்துகொண்டு பயிற்சி திட்டங்களை விளக்கினார். பெண்கள் தொழில்திறனை வளத்துக்கொள்ள, முன்னேற்றமடைய ஊரக தொழில்முனைவோர் மையத்தில் பயிற்சி எடுத்துக்கொள்ளலாம். டிரைவிங், செல்போன் சரிபார்த்தல், வீடியோ போட்டோகிராபி, விவசாயம் சம்பந்தப்பட்ட பயிற்சிகள் குறித்து விளக்கினார். கடன் திட்டங்களை பெறும் முறைகள், இயற்கை விவசாயம், ஆடுமாடு வளர்ப்பு, தீவனங்கள் முறை குறித்து எடுத்துரைத்தார். சமூகநலத்துறை அலுவலர் இந்திரா, தாய்ப்பாலின் அவசியம், குழந்தை வளர்ப்பு முறைபற்றி கூறினார். சமூகநலத்துறையில் உள்ள திட்டங்களை எடுத்துக்கூறி பெறும் வழிமுறைகளை விளக்கினார். அரெட்ஸ் ஒருங்கிணைப்பாளர் பாக்கியம், நபார்டு மூலம் உழவர், உருவாக்குதல், குறித்தும், கூட்டுபொறுப்புக்குழு மூலம் ஒருவருக்கொருவர் வங்கியில் இணைப்பை ஏற்படுத்தி தொழில்துவங்கி முன்னேறுவது பற்றி கூறினார். கூட்டு செயல்பாட்டில் குழு உறுப்பினர்கள் இணைந்து இயற்கை விவசாயம் செய்வது பற்றி விளக்கம் அளிக்கப்பட்டது. லதா வரவேற்றார். மோகனா நன்றி கூறினார்.

## அனைத்துவகை பயிர்களிலும் கூடுதல் மகசூல் பெற மண் பரிசோதனை அவசியம்

சேதுபாவாசத்திரம், : அனைத்துவகை பயிரிகளிலும் அதிக மகசூல் பெற சாகுபடிக்கு முன் மண் பரிசோதனை செய்வது அவசியம் என்று விவசாயிகளுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது. சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பெரியசாமி வெளியிட்டுள்ள அறிக்கை: மண்ணில் உள்ள பேரூட்ட சத்துக்களான தழை, மணி, சாம்பல் சத்துகளின் அளவை கணக்கிட்டு சமச்சீர் முறையில் உரமிடுவதற்கும்,

சிக்கன முறையில் உரமிட்டு உரச்செலவை குறைத்திடுவதற்கும், அதற்கேற்ப கண்மாய் வண்டல் அல்லது மணலிட்டு மண் நயத்தை மேம்படுத்துவதற்கும், மண் தரம் அறிந்து நுண்ணூட்ட உரமிடுவதற்கும், மண் ஆய்வு செய்வது அவசியமாகும். பயிர் சாகுபடி செய்வதற்கு முன்பு மண் ஆய்வு செய்ய வேண்டும். முக்கியமாக கோடை காலங்களில் பயிர் இல்லாத தருணத்தில் செய்வது சாலச்சிறந்தது. மண் மாதிரியை எரு குவிக்கப்பட்ட இடம், வரப்பு ஓரம், நடைபாதை, வயல் ஓரம், வாமடைப்பகுதி மற்றும் நீர் தேங்கும் பகுதிகளில் எடுப்பதை தவிர்க்க வேண்டும். குறைந்தது ஒரு வயலில் 10 இடங்களில் மண் மாதிரி எடுக்க வேண்டும்.

இதற்கு அலுமினிய கரண்டி அல்லது மூங்கில் குச்சிகளை பயன்படுத்துவது நல்லது. சேகரித்த மண்ணை சுத்தமான சாக்கு அல்லது பிளாஸ்டிக் தாள் அல்லது சுத்தமான சிமென்ட் தரையில் கொட்டி பெரிய கற்கள், வேர்களை நீக்கிவிட்டு நன்கு கலக்கி பரப்ப வேண்டும். பரப்பிய மண்ணை நான்கு சம பாகங்களாக பிரிக்க வேண்டும். எதிர் எதிர் பாகங்களை நீக்கி விட்டு மீதம் உள்ள இரண்டு பாகங்களை ஒன்று சேர்த்து கலக்கி மறுபடியும் நான்கு பாகங்களாக பிரிக்க வேண்டும். முதல் தடவை நீக்கப்பட்ட பாகங்களை விட்டுவிட்டு மற்ற எதிர்பாகங்களை நீக்க வேண்டும்.

மீதமுள்ள 2 பாகங்களையும் ஒன்று சேர்த்து ஏற்கனவே செய்தது மாதிரி அரைக்கிலோ மண் இருக்கும் வரை செய்ய வேண்டும். இதற்கு நான்கு “சமபாக முறை” அல்லது “கால் பங்கீட்டு முறை” என்று பெயர். நெல், சோளம், கம்பு, நிலக்கடலை ஆகிய பயிர்களுக்கு 15 செ.மீ ஆழத்திலும், மிளகாய், பருத்தி, கரும்பு, வாழை, காய்கறிகள், மரவள்ளி கிழங்கு ஆகிய பயிர்களுக்கும், தென்னை மற்றும் மரப்பயிர்களுக்கும் 90 செ.மீ ஆழத்திலும், பழ மரங்களுக்கு 150-180 செ.மீ ஆழம் வரையிலும் புல் வகை பயிர்களுக்கு 10 செ.மீ ஆழத்திலும் மண் மாதிரிகள் எடுக்க வேண்டும். களர், உவர் நிலங்களுக்கு தனித்தனியாக மண் மாதிரிகள்

எடுக்க வேண்டும். மண் மாதிரியுடன் உழவரின் பெயர், கிராமம் மற்றும் முகவரி, சர்வே எண், முன்னர் பயிரிடப்பட்ட பயிரின் பெயர், அடுத்து பயிரிடப்போகும் பயிரின் பெயர் ஆகிய விபரங்கள் அடங்கிய மண் மாதிரி விபரத்தாளையும், மண் பரிசோதனை ஆய்வகத்துக்கு அனுப்ப வேண்டும்.